க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. } 1924ஞு நவம்பர்மீ { இதழ் 3.

தெய்வ வழிபாடு.

"நினைப்பு நினைவுங் கெட்டாத நெறிபெற் றுணர்ந்த நெறியாளர்
வினையைக் கலைக்கும் பரமவின்ப வெள்ளப் பெருக்கே நினதருளால்
மனைவி மக்க ளன்னைபிதா மாடு வீட்டோடன் றிமயக்கம்
தனையு மறந்தின் னுணைமறவாத் தன்மை வருமோ சாமியேற்கே."

நாடார் மஹாஜன சங்கம்.

9—வது கான்பரன்ஸ், மதுரை.

நாடார் மகாஜன சங்கம் பிரஸிடெண்ட்,

ஸ்ரீமான், வீ. பாலகுருசாமி நாடார் அவர்களின் பிரசங்கம்,

ஜனதன்பார்ந்த நண்பர்களே!

நம் க்ஷேமத்தைப்பற்றியும், நம் முன்னேற்றத்தைப் பற்றியும் இம் மகாநாட்டில் என்னை மறுபடியும் பேசும்படி அழைத்ததற்காக நான் என் முழுமனதோடும் உங்களுக்கு வந்தனமளிக்கிறேன். நீங்கள் என்மேல் சுமத்திய பெரும் பொறுப்பை என்மனதில் வைத்து நான் சொல்லப்போகும் விஷயங்களைப் பொறுமையுடன் கேட்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

முந்தின மகாநாட்டிற்குப் பிறகு அநேக வழிகளில் திருப்திகரமான முன்னேற்றமடைந்திருக்கிறோம். இம்மகாநாட்டின் அங்கத்தினரின் சங்கியை அதிகரித்திருக்கிறது. சில கிளைச்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு இம் மகாநாட்டின் சில முக்கிய நோக்கங்கள் திருப்திகரமாய் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. ஆனல் இன்னும் நாம் செய்யவேண்டிய காரியங்களை நினைக்கும்போது இதுவரையில் செய்யப்பட்டிருக்கும் காரியங்கள் மிகவும் சொற்பமே, நம்

மரபின் முன்னேற்றத்திற்காக நம்மில் ஒவ்வொருவரும் தன்னாலியன்ற ஒத்தாசை செய்தாலன்றியில நாம் ஒவ்வொரு வருஷமும் திருப்திகரமான முன்னேற்றத்தை உலகத்தாருக்குக் காட்ட முடியாது.

நான் வேறு காரியங்களைப்பற்றிப் பேசுவதற்குமுன் ஒரு முக்கிய விஷயத்தைப்பற்றிப் பேசப் பிரியப்படுகிறேன். அதாவது, நம்முடைய எல்லாவித சக்தியும், சாதனங்களையும் ஒருங்கு சேர்த்துக் கூட்டி சரிவரத் திறமையோடு நடத்தினால்தான் நாம் பெருங்காரியங்களை சாதிக்கச் சாத்திய முடையவர்களாவோம். இம்மகாநாடே நம்மை ஒருங்கு சேர்க்கும் திறமைக்குத் தக்க அறிகுறியாகும். நாம் ஒருவரை யொருவர் தெரிந்து கொள்ளவும், நம்மரபினர் சம்பந்தமான சில முக்கிய விஷயங்களில் நம் அபிப்பிராயங்களை வெளியிடவும் சௌகரியம் செய்தது இம்மகாநாடுதான்!

நாம் வருஷத்தில் ஒரு முறைதான் கூடுகிறோம். அதோடு நம்வேலை முடிந்துவிட்டதாக நினைக்கக்கூடாது. நம் மரபினரின் தொகையையும், அவர்கள் வசிக்கும் இடங்களின் விஸ்தீரணத்தையும் நோக்கும்போது, தமிழ் நாட்டிலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிலும், ஒவ்வொரு மகாநாடு அவசியம் கூட்டவேண்டுமென்பது பிரத்தியக்ஷமாய்த் தோன்றுகிறது. திருநெல்வேலி, தஞ்சாவூர் ஜில்லாக்களில் இம்மாதிரியான மகாநாடுகள் முன்னமே ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகிறது. ஜில்லா மகாநாடுகள் நம்மெல்லோருக்கும் பொதுவான விஷயங்களையும், அந்தந்த ஜில்லா சம்பந்தமான விஷயங்களையும் யோசித்து அவைகளுடைய தீர்மானங்களை இப்போது மகாநாட்டிற்கு அனுப்பலாம். இம்மகாநாடு அவைகளைத் திரயோசித்து அதன்மேல் செய்யவேண்டிய காரியங்களைச் செய்யலாம். இச்ஜில்லா சங்கங்கள் அந்தந்த ஜில்லாக்களிலுள்ள முக்கிய ஸ்தலங்களில் வருஷா வருஷம் மாறி மாறி நடைபெறவேண்டும். அப்போதுதான், நம் மரபினரின் ஒவ்வொருவருக்கும் அவர்களின் முன்னேற்றத்திற்காக செய்யப்படும் காரியங்கள் பிரத்தியக்ஷமாய்த் தெரிய வரும். இவ்விஷயத்தைச் சரிவர நடத்துவதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு உத்தியோகசாலை இருக்கவேண்டும். இவ்வேற்பாடு இம்மகாநாட்டின் நோக்கத்தை விர்த்திசெய்ய அதிக உதவியாய் இருக்குமென்பதைப்பற்றி பின்னால் விவரமாய்ச் சொல்லுகிறேன்.

எல்லாவித முன்னேற்றத்திற்கும் ஆதாரமானது கல்வி; இக்கல்வி விஷயமாய்ச் சில வார்த்தைகள் சொல்லுகிறேன்.

கல்வி.

ஜன சமூகத்தின் முன்னேற்றத்தைக் கருதும் எவரும் கல்வியின் அவசியத்தைப்பற்றிப் பேசப் பின்வாங்கமாட்டார்கள். கல்வி விஷயத்தில் நாம் மற்ற மரபினர்களைவிட முன்னேற்றமடைந்திருக்கிறோம் என்று சொல்லிக்கொள்வதில் பிரயோஜனமில்லை. நாம் சில உயர்தரப் பாடசாலைகளை ஸ்தாபித்து நடத்துவது வாஸ்தவந்தான். இந்த ராஜதானியில் நாம் மாத்திரந்தான் ஒரே ஒரு தர்ம உயர்தரப் பாடசாலையை வைத்து நடத்திவருகிறோம். இம்மாதிரி இன்னும் அனேகப் பாடசாலைகளை ஸ்தாபித்து உயர்தரப் படிப்பை அபிவிர்த்தி செய்யவேண்டும். நம் மரபினரின் ஒரு ஏழைப் பிள்ளையாவது ஆரம்பக் கல்வி பயிற்றுவிக்காமல் விட்டுவிடுவோமேயானால் நாம் நம்மை ஒரு முன்னேற்றமடைந்த மரபென்று சொல்லிக்கொள்ள முடியாதென்பது திண்ணம். இவ் விஷயமாய் நான் சொல்லுவதென்னவென்றால் நம்முடைய ஜில்லா மகாநாடுகள் நம்மவரின் ஒவ்வொரு ஏழைக் குடும்பத்திற்கும் கல்வி பயிற்றுதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். தேசத்தின் க்ஷேமத்தைக் கருதும் தேச பக்தன் எவனும் கல்வி விஷயத்தில் அசட்டையாயிரான்.

இப்படியிருக்க, நம்மரபின் முன்னேற்றத்தைக் கருதும் இம்மகாநாடு கல்வி விஷயத்தில் அதிசிரத்தையாயிருக்கவேண்டும். ஆரம்பக் கல்வியைப் பரவச்செய்து அறியாமையை வேரைவிட்டகற்ற வேண்டுமென்று இப்போதிருக்கும் நமது கல்வி இலாகா மந்திரி அதிக சிரத்தையோடு உழைத்து வருகின்றார். நாமும் இந்தச் சமயம் ராஜாங்கத்தாருடன் ஒத்

இன்றைத்து அநியாயங்களை ஊரிலிருந்து அடியோடு அகற்ற பிரயாஸைப்படவேண்டும். நம் தேசத்தின் ஏழ்மை ஸ்திதியை உத்தேசித்து நமது ஆரம்பப் பாடசாலைகளை கல்வி பயிற்றும் பாடசாலைகளாகவும், அதே சமயத்தில் தொழில் கற்றுவிக்கும் தொழிற்சாலைகளாகவும் செய்வதுதான் உத்தமம். இப்படிச் செய்வதனால் நம் பிள்ளைகள் எழுதப் படிக்க கற்றுக் கொள்வதுடன் பிற்கால ஜீவியத்திற்குதவியாக ஒரு தொழிலையும் கற்றுக்கொள்வார்கள். இவ்விஷயத்தை நாம் திறமையோடும், தீவிரத்தோடும் ஆரம்பித்து நடத்தினால் ராஜாங்கத்தார் முழு மனதோடும் வேண்டிய உதவிகள் செய்வார்களென்பதற்குச் சந்தேகமில்லை. தற்காலப் பள்ளிக்கூடங்கள் எழுதப் படிக்கக் கற்றுக்கொடுப்பதிலேயே அதிகக் காலத்தை வீண் செலவு செய்கின்றன. பாலியப் பருவத்தை இவ்விதம் கழிப்பது விரும்பத்தக்கதல்ல. எவ்விதமான தொழில் நம் ஆரம்பப் பாடசாலைகளால் கற்பிக்கப்பட வேண்டுமென்பதை அந்தந்த ஜில்லா மகாநாடுகளே தீர்மானிக்கும்படி விட்டுவிடலாம்.

உயர்தரப் படிப்பிலும் இலௌகிகமாய்க் கல்வியையும், தொழிலையுஞ் சேர்த்துப் பயிற்றுவிப்பதுதான் நலம். இப்படிச் செய்வதனால் நம் பிள்ளைகள் யாவருக்கும் உயர்தரக் கல்வி கற்பது சாத்தியமாகும். இவ்வுயர்தரப் படிப்பு முடிந்தவுடன் மாணவர்களை இரு வகுப்பாய்ப் பிரித்து ஒரு வகுப்பைத் தாங்களிஷ்டப்பட்டத் தொழில் கற்கவும், மற்றொரு வகுப்பைத் தொழிற் படிப்பிற்கு முன் கலாசாலையில் கல்வி கற்கவும் விடலாம். நாம் இதுவரையில் கைத்தொழில் கற்பதற்குத்தக்க ஏற்பாடுகள் ஒன்றும் செய்யவில்லை. நம் தேசத்திலும் அந்த சௌகரியமில்லை. நம் தேசத்திலுள்ள சில தொழிற் படிப்புசாலைகள் சாதாரணத் தச்சவேலை கொல்லுவேலை முதலிய தொழில்களை வாலிபர்களுக்குப் பயிற்றுவிப்பதிலேயே காலத்தைச் செலவிடுகின்றன. இப்படித் தொழில் கற்றவர்கள் ஜீவனத்திற்காக வெளியிலுள்ள பாரம்பரைத் தொழிலாளிகளோடு போட்டி போடவேண்டியிருக்கிறது. நாம் செய்யவேண்டியது என்னவென்றால்; இயந்திரங்களை வரவழைத்து நம் வாலிபர்களுக்கு அவ்வியந்திரங்களைக் கையாடப் பயிற்றுவிக்கவேண்டும். நம் தேசத்தில் கிடைக்கும் வஸ்துக்களைச் செய்யாமல் பிறதேசத்திற்கு ஏற்றுமதி செய்து மறுபடியுமதை வேலைசெய்யப்பட்ட சாமான்களாக இறக்குமதி செய்தால் நம்ஜனங்களுக்கு வேலை கிடைக்காமற் போகிறது. மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்களிலிருந்து எத்தனையோ லக்ஷம் ரூபாய் பெருமானமுள்ள பருத்தி அயல்தேசத்திற்கு ஏற்றுமதியாகிறது. அப்படி ஏற்றுமதி செய்வதால் நம் தேசத்தில் அனேகமாயிரம் ஜனங்கள் தங்களுக்கு வேலை கிடைக்காமல் அவஸ்தைப்பட்டு தங்கள் ஜீவனத்திற்காக அயல் நாட்டிற்குப் போகவேண்டியிருக்கிறது. நம் தேசத்தின் விளைபொருள்களை நமது கைத்தொழில் சாலைகளிலேயே வேலை செய்வதுடன் நம்மவரின் சாமர்த்தியத்தைக் கொண்டே நம் தேசத்திற்கேற்ற நலமான இயந்திரங்களைச் செய்யும்படி தூண்டவேண்டும். நம் தேசத்தின் தொழிலாளிகளின் சம்பாத்தியத்தைக் கவனிக்கும்போது, நம்மால் செய்யமுடியாத இயந்திரங்களை மாத்திரம் அயல்நாட்டிலும், சுலபமாய் செய்யக்கூடும் பாகங்களை நம் தொழிற்சாலைகளிலும் செய்து தொழில் ஸ்தாபனங்களை ஏற்படுத்திநடத்துவது அதிக லாபகரமாயிருக்கும்.

சாயம் நனைத்தல் முதலிய உயர்தரக் கல்வியை இந்தியாவிலாவது இந்தியாவின் தொழில் அபிவிருத்தியில் பொறாமைக்கொண்ட அயல் நாட்டிலாவது கற்பது கூடாதகாரியம். சர்க்கார் சகாயம்பெற்று அயல் நாட்டிற்குப்போய் தொழில் கல்வி கற்பவர்களுக்கே முழுதொழில் ரகசியங்களைக் கற்பதற்கு சாத்தியமில்லை. ஆகையால் நம் வாலிபர்கள் உயர்தரத் தொழில் கல்வியில் முழுத்தேர்ச்சி யடைய வேண்டுமென்றால் நம் வாலிபர்களை அயல் நாட்டில் அநேக வருஷம் தங்கியிருந்து தொழிலில் தேர்ச்சியடைய சௌகரியம் செய்யவேண்டும். இப்படிச் செய்வதற்கு நமக்கு ஏராளமான செலவு பிடிக்குமானாலும், நாம் ஊக்கத்தோடு முன்வந்

தால் சர்க்கார் சகாயத்தைதயும் எதிர்பார்க்கலாம்.

உயர்தரக் கல்வி விஷயமாய் நான் சொல்லப்போவது உங்களுக்குத் தெரியாததல்ல. நம்மவர்களுக்காக ஒரு கல்லூரி அவசியம் ஏற்படுத்தவேண்டும். அதில் உயர்தரக்கல்வி கற்க சாதகம் ஏற்படுத்துவதோடு பலதொழில்களைக் கற்கவும் சாதகங்கள் அமைக்கவேண்டும்.

பெண் கல்வியானது மேலே சொல்லிய பொதுக் கல்வி விஷயத்தில் அடங்கியிருப்பதாலும், இவ்விஷயமாய் நான் அதிகம் சொல்லவேண்டியதில்லை.

ஆனால் முதியோர்களுக்குக் கல்வி பயிற்றுவிக்கும் விஷயமாய் நான் பேசாமலிருக்க முடியாது. கல்வியில்லா நம் ஜனங்கள் எந்தத்துறையிலும் முன்னேற்றமடைவது அசாத்தியம், நமது பள்ளிக்கூடங்களில் பத்திரிகை வாசிப்புக்கூடங்கள் ஏற்படுத்தி அவைகள் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு மாத்திரம் பிரயோஜனமாயிருக்கும்படி யில்லாமல் நம்மவர்களில் முதியோர்களுக்கும் பிரயோஜனமா யிருக்கும்படி செய்வது நலம். இவ்வாசிப்புக் கூடங்களோடு உபந்நியாசங்கள் முதலியவற்றின் உதவியால் நம் முதியோர்களுக்கும் விஷய ஞானத்தை விர்த்திசெய்ய வேண்டும். இவ்விஷயங்கள் ஜில்லா மகாநாட்டின் ஆதரவின் கீழ்தான் நடைபெறக் கூடும். இதற்காக என்ன செலவானாலும் அது வீண் செலவாகாதென்று உறுதியாய்ச் சொல்வேன். நான் கல்வி விஷயமாய் அதிகமாகவே சொல்லி யிருக்கிறேன். சொல்லப்பட்ட விஷயங்களில் நம்மால் கூடியவை நடத்தப் பிரயத்தனப்படுவது உசிதம், கல்வி விஷயங்களை ஆலோசித்து நடத்த இம்மகாநாட்டில் அங்கத்தினரில் சிலரை ஒரு சிறு சங்கமாக நியமிக்கவேண்டும். அச் சிறு சங்கத்தின் கடமைகளாவன.

1. வருஷா வருஷம் நம் மரபினரின் கல்வி முன்னேற்றத்தைப் பற்றி இம் மகாநாட்டிற்கு விவரமாய்த் தெரிவித்தல்.

2. ஜில்லாமகாநாடுகளின் கல்வி விஷயமான அபிப்பிராயங்களைச் சேகரித்து அதன்மேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கு யோசனை சொல்லுதல்.

3. கல்வி விஷயமாய் புது முறைகளையும் துறைகளையும் அனுஷ்டிக்க இம்மகாநாட்டிற்கு யோசனை சொல்லுதல்

4. நம்மரபினரின் கல்வி முன்னேற்ற விஷயமாய் அரசாங்கத்தாரிடத்தும், அரசாங்கக் கல்வி இலாகா உத்தியோகஸ்தரிடத்தும் வேண்டிய சௌகரியங்களைத் தேடுதல்.

5. கல்வி சம்பந்தமான விஷயங்களை நம்மரபின் பத்திரிகை மூலமாவது, வேறுவிதமாகவாவது அச்சிட்டுப் பரவச்செய்தல்

கைத்தொழில்.

எவ்விதப் படிப்பின் நோக்கமும் பின் ஆயுளில், படித்த காரியங்களை உபயோகிப்பதற்கே என்பதை விவரிக்க வேண்டியதில்லை கல்வி கற்பதில், நம முயற்சிகளெல்லாம் சிறந்ததும், பெருமை வாய்ந்ததும், பயன் மிக்கதுமான ஒரு வாழ்க்கையை நிலை நிறுத்துவதற்கே செலுத்தப்படுகின்றன. நம் மரபினரின் கல்வியை நாம் சரியான வழியில் நடத்துவோமானால் நம்மவர்கள் ராஜீய விஷயங்களிலும், வியாபாரம், கைத்தொழில் முதலிய விஷயங்களிலும், முன்னேற்றமடைந்து தேசத்திற்கு நன்மை விளைவிப்பார்க ளென்பது திண்ணம். நம்மரபினர் இத்தேசத்தில் ஊக்கத்தோடு வேலை செய்வதில் சிறந்தவர்கள் என்று முன்னமே பேர்வாங்கியிருக்கிறார்கள். கைத்தொழிலிலும், வியாபாரத்திலும் முன்னேற்றமடைந்து விளங்கும் உங்களுக்கு நான் யோசனைகூற முயல்வது தகுதியாகாது. என்றாலும் நான் இவ்விஷயமாய்ச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். புதிய கைத்தொழில்களை ஏற்படுத்தவும், ஏற்கனவே நாம் நடத்திவரும் கைத்தொழிலிலும், வியாபாரத்திலும் முன்னேற்றமடையச் செய்வதற்கும் நம் மரபினர்களின் முயற்சிகள் யாவையும் ஒருங்கு சேர்க்கவேண்டும்.

முதலில் சர்க்கரை வியாபாரத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம்மவர்கள் இப்போதும் இவ்வியாபாரத்தைக் கைவிடாமல் நடத்திவருகிறார்கள் ஆனால் இக் கைத்தொழிலில்

அனுஷ்டிக்கப்படும் முறை மிகவும் புராதன முறையாய் இருக்கிறது. சர்க்கரையை சுத்தி கரிக்க புதிய முறைகளை இன்னும் நாம் கையாளவில்லை. ஆகையால் இத்தொழிலில் நாம் விர்த்தி யடைவதற்கு மார்க்கமில்லை. நாம் உண்டாக்கும் சர்க்கரையை உபயோகத்திற்குத் தகுதியாக்கு முன், ஆலைக்கு அனுப்பி சுத்தம் செய்யவேண்டி யிருக்கிறது. தற்காலத்தில் கையாளப்படும் ரஸாயன முறைகளையும், தொழில் முறைகளையும் நாம் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருவோமானால் மேல் தரமான சர்க்கரையைத் தயார் செய்யலாம். நம்மவர்கள், மண்பாண்டங்களை விட்டு உலோகப்பாத்திரங்களை உபயோகிக்கும்படி நம்மாலியன்ற ஒத்தாசை செய்யவேண்டும். இன்னும் சுத்தம் செய்வதில் லாபகரமான வழிகளை நம்மவர்களுக்குப் போதிப்பதினால் மேனாட்டார்களும் மெச்சத்தக்க அனேகவித உயர்ந்த தின்பண்டங்களை தயாரித்து லாபத்தைப் பன்மடங்கு அதிகப்படுத்தலாம். நாளுக்கு நாள் க்ஷீணதிசை யடைந்துவரும் சர்க்கரை வியாபாரத்திற்கு நம்மாலியன்ற தக்க உதவி நாம் புரியாவிடில் நாம் இவ்வியாபாரத்தை முற்றிலும் பயனில்லாமல் இழந்து விடுவோமென்பதற்கு ஐயமில்லை.

நெசவுத் தொழிலைக் கைக் கொள்வதால் எவ்வளவோ பேர்கள் லாபமடையலாம். நெசவுத் தொழில் ஒரு முக்கிய கைத்தொழிலாக வாவது, அல்லது வேறு வேலை யில்லாத காலத்தில் உபதொழிலாகவாவது கைக் கொள்ளலாம். இவ்விஷயங்களில் என்னைவிட அனுபோகத்தில் சிறந்தவர்கள் அநேகர் இருக்கிறார்கள் என்பது நிச்சயம். நாமெல்லோரும் ஒன்று கூடி மார்க்கங்களை ஆலோசிப்போமானால் நம்மவர்களின் செல்வவிர்த்தியை அதிகப்படுத்தலாம். ஜனசமூகத்தில் ஒரு வகுப்பினரின் நிலைமை அவர்கள அறிவையும் செல்வத்தையும் பொருத்திருக்கிறது. அறிவில் நம்மரபினர்கள் மற்றவர்களைவிடத் தாழ்ந்தவர்களல்ல. வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் நம்மிற் சிலர் சிறந்து விளங்குகிறார்கள். ஆனாலும் நம்மரபினரெல்லோரும் முன்னேற்றமடைந்தால்தான் நமக்குரிய செல்வாக்கை மேன்மைப் படுத்தலாம். இவ்விஷயத்தை நான் முடிப்பதற்குமுன் நாம் விர்த்தி செய்வதற்குரிய சில முறைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது வருஷாந்திர மகாநாடு கூடும்போது அத்துடன் கைத்தொழிற் காக்ஷிசாலை யொன்றை திறக்கவேண்டும். இதில் நம்மவர்களால் தொழிலிலும் வியாபாரத்திலும் கையாளப்படும் பொருள்கள் யாவுங் காக்ஷிக்கு வைக்கப் படவேண்டும். இதனால் நம் கைத்தொழில்கள் விர்த்தியடைவதுடன் ஏழை ஜனங்களுக்கு லாபகரமான தொழில் அகப்படுமென்பதில் ஐயமில்லை. இன்னும் நம் சரக்குகளின் சிறப்பை அதிகச் செலவில்லாமல் பரவச் செய்யலாம். இதனால் நம்மவர்களின் தொழில் வன்மையும் தூண்டப்படுவதுடன் பல நன்மைகளும் விளையும் என்பதற் கையமில்லை.

மேல்நாட்டு வியாபாரம் சரக்குகளின் சிறப்பை வெளியில் பரவச்செய்வதால் கிரமமாய் விர்த்தியாகிறதென்பது உங்களுக்குத் தெரிந்ததுதான் அவர்களைப்போலவே நாமும் நம் சரக்குகளின் சிறப்பை வெளியில் பரவச் செய்வதற்கு சென்னையைப் போன்ற பெரிய பட்டணங்களில் நாம் காக்ஷிசாலைகள் ஸ்தாபித்து நம் சரக்குகளைப் பார்வைக்கு வைக்கவேண்டும். அவ்விடத்தில் சரக்குகள் வாங்க விரும்புவோருக்கு அவைகள் கிடைக்குமிடத்தை விவரித்துக் கொடுக்கலாம். இதைப்பற்றி சென்னையில் பிரசுரமாகும் சில சமாசாரப் பத்திரிகைகளில் பிரசுரம்செய்து, வெளியூர்களில் உள்ளவர்களுக்கும் அறிவிக்கலாம். தேவை அதிகமாயிருக்குமானால் பண்டகசாலைகளில் சாமான்களைச் சேகரித்து வைத்திருந்து அப்போதைக்கப்போது தேவையானவர்களுக்கு விற்று ஏதோ கொஞ்சந் தரகு எடுத்துக் கொண்டு மீதியை சாமான் அனுப்பியவருக்குச் சேர்த்து விடலாம். இதனால் சாமான்களைச் செய்கிறவர்கள் முதலுக்கே மோசமாய்த் தங்கள் சாமான்களை விற்று நஷ்டமடையாமல் நல்ல லாபமடையலாம். பெரிய பட்டணத்தில மேற்சொன்ன ஏற்பாடு திருப்திகரமாய் வேலைசெய்தால்

கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, மதுரை போன்ற தென்னிந்தியாவிலுள்ள மற்ற முக்கிய வியாபார ஸ்தலங்களிலும் இவ்விதமே ஏற்பாடு செய்யலாம். அவ்வேற்பாட்டைப் பூர்த்தி செய்ய, அயல்நாடுகளில் நம் சரக்குகளின் சிறப்பை எடுத்துரைக்க சுற்றுப்பிரயாணம் செய்யும் பிரதிநிதிகளையும் அனுப்பவேண்டும்.

மூலதனம்.

கைத்தொழிலுக்கு முக்கிய ஆதாரம் மூலதனம் என்பது நம்மெல்லோருக்கும் நன்கு தெரிந்த விஷயம். போதுமான மூலதனமில்லாவிட்டால் எந்தக் கைத்தொழிலும் விர்த்தியாகாது. ஆனால் மூலதனமோ நாம் நினைத்தமாத்திரத்தில் வேண்டிய அளவு கிடைத்து விடாது. ஆனால் வியாபார முறையில் நல்ல நாணயமும் நம்பிக்கையுமிருந்தால் அது மூலதனத்திற்குச் சமானந்தான். நம்மரபினர் ஒன்று சேர்ந்து தக்க நாணயம் நமக்குள் உண்டுபண்ணிக்கொள்ளாவிட்டால் நாம் நம்மை ஒரு சிறந்த மரபினரென்று சொல்லிக்கொள்ள முடியாது. நான் முன் சொன்ன விஷயங்கள் யாவும் பொதுநன்மையின் பொருட்டு, ஐக்கியத்துடன் ஒத்துழைக்கும் கொள்கையையே ஆதாரமாய்க் கொண்டது. இக் கொள்கையின்படி நடத்தப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் தேசமுழுவதும் ஏற்பட்டு நன்றாய் நடந்துவருகின்றன. நம்முடைய வியாபார முறையிலும் இக்கொள்கையை அனுபோகத்திற்குக் கொண்டுவருவோமானால் நாமும் நம் மூலதனத்தை மிகவும் விர்த்திபண்ணலாமென்பது திண்ணமாகின்றது. நம் மரபினர் ஜனத்தொகை எங்கெங்கே பெருக்கமாயிருக்கின்றதோ அவ்விடங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தவேண்டும். இவைகளை ஜில்லாச் சங்கத்தோடு இணைக்கப்படவேண்டும். ஜில்லா சங்கங்கள் மத்திய கூட்டுறவுச் சங்கத்தோடு சேர்க்கப்படவேண்டும். மத்திய கூட்டுறவுச் சங்கமோ நம்மவர்களில் மத்திய நிதியோடு ஒருங்கு வேலைசெய்ய வேண்டும். இவ்வி[illegible] மத்திய நிதியும் அதன் கிளைகளும் திருப்தியாய் நடந்துவரும் பட்சத்தில் நமது வியாபாரம் கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலதனத்தையும் நாணயத்தையும் நாம் சுலபமாய் பெறுவதுடன் நம் வியாபாரிகள் தனித்தனியாய் சில்லரை தண்டல் விஷயத்தில் படும் சட்டங்களையும், நிவர்த்திக்கலாம். நம் வியாபாரிகளின் வேண்டுகோள்களின் பேரில் முன்பணம் கொடுத்தோ, அல்லது சேரவேண்டிய பாக்கிகளை வசூலித்தனுப்பியோ இந்நிதிகள் வியாபாரத்திற்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்யக்கூடும். மேலே சொல்லப்பட்ட காரியங்களையெல்லாம் ஒருமித்து நடத்துவதற்கு வேண்டிய மூலதனம் எங்கிருக்கிறதென்று கேட்கலாம். இவ் விஷயத்தில் நாம் அதிர்ஷ்டசாலிகளே. நாம் மகமைத் தொகைகள் சேர்த்து வைத்திருக்கிறோம். இத்தொகைகளை லாபகரமான நல்ல துறைகளில் செலவிடுவதிலும், ஐக்கிய நாணயச் சங்கங்களுக்கும் விவசாய நிதிகளுக்கும், கைத்தொழில் நிதிகளுக்கும் மூலதனமாக உபயோகிப்பதிலும் ஒருவித ஆட்சேபனையும் இராது. மகமைத் தொகையை நம் நிதிகளுக்கு ஆதாரமாகக் கொண்டு ஆரம்பித்தல் மற்றவர்களும் தங்கள் சொந்த முதல்களைக்கொண்டு நமக்குத் தக்க ஒத்தாசை புரிவார்கள். இவ் வேற்பாட்டில் மகமைத் தொகைகளும் பயனற்றில்லாமல் லாபகரமான வழியில் உபயோகிக்கப்படும். இவ் விஷயத்தை முடிப்பதற்கு முன் வியாபாரம் கைத்தொழில் விஷயங்களைக் கவனிக்க இம் மகாநாட்டின் அங்கத்தினரில் சிலரை ஒரு சிறு சங்கமாக நியமிக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் பிரத்தியேகமாக வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைக் கவனிக்க சிறு சங்கங்கள் ஏற்படுத்தி மத்திய சங்கத்தோடு ஒத்துழைக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்பதை உங்களுக்கு வற்புறுத்த விரும்புகிறேன். பின் வருபவைகள் இச் சங்கத்தின் கடமைகளாகும்.

நம்மரபினர் செய்துவரும் விவகாரங்களைப் பற்றியும், அவைகளின் தற்கால நிலைமைகளைப் பற்றியும் விவரமான கணக்கு தயார் செய்து இம் மகாநாட்டிற்கு அனுப்புதல்.

இப்போதிருக்கும் கைத்தொழிலை விர்த்தி செய்வதற்கும், புதிதாயும் லாபகரமாயுமுள்ள

தொழில்களை ஆரம்பம் செய்வதற்கும் யோசனை சொல்லுதல்.

நம் மரபினர்களின் தொழில்களைப் பற்றிய சமாசாரங்களைச் சேகரித்துப்பிரசுரம்செய்தல்.

இம் மகாநாட்டோடு நடைபெறும் வருஷாந்தரத் தொழிற் காக்ஷி சாலையை திருப்திகரமாய் நடத்த மார்க்கங்களைத் தேடுதல்.

கூடுமான போதெல்லாம் நம்மவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும், சுதந்திரங்களையும் தேடுதல்.

ஜனசமூக விஷயம்.

நமக்குள்ளிருக்கும் கட்டையும் ஐக்கியத்தையும் மற்றவர்களுக்கு விளக்க இவ் வருஷாந்திரக் கூட்டம் மட்டும் போதாதென்று எனக்குத் தோன்றுகின்றது. நம் தலைவர்கள் அடுத்துள்ள ஊர்களுக்குச் சுற்றுப்பிரயாணஞ் செய்து அவற்றில் மிகுந்த ஏழையாய் உள்ளவர்களுக்கும் எவ்வழியினால் அவர்கள் நிலைமையைச் சீர்திருத்துவதற்கான மார்க்கத்தைத் தாம் தேடுகிறோம் என்பதை எடுத்துக்கூறி அவர்களையும் நாம் செய்யும் காரியங்களில் உற்சாகங் கொள்ளும்படி செய்யவேண்டும், அக் காலங்களில் அவ்வூர்களில் பற்பல விளையாட்டுகள் நடத்த வேண்டும். இதுவுமன்றியில் தற்காலத்திற்கு ஏற்றவாறு நம்மவர்களுக்காக சத்திரங்களை முக்கிய பட்டணங்களில் ஏற்படுத்த அவைகளோடு புத்தகசாலைகளையும் வாசிப்பு சாலைகளையும் சேர்த்து வைக்கவேண்டும். பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்குக் கல்விச்சாலைகள், ஏழைகளுக்குத் தொழிற்சாலைகள், ஏழை மாணாக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்தல் இன்னும் இவைபோன்ற சாஸ்வதமான தர்மங்களுக்கு நம் தனத்தை உபயோகப் படுத்தவேண்டும்.

ராஜ்ய விஷயம்.

நம் சக்கிரவர்த்திக்கு நாம் என்றும் மாறாத விசுவாசம் உள்ளவர்கள் என்பதையும், அவரை மனப்பூர்வமாய் நாம் போற்றுகிறவர்கள் என்பதையும், அரசாங்கத்தாரிடம் நாம் வைத்திருக்கும் மதிப்பையும் நான் வற்புறுத்திச் சொல்லுகிறேன். நம்மரபினரும், நம் தேசமும் முன்னேற்றம் அடைவதற்கான மார்க்கங்களில் நாம் இராஜாங்கத்தோடு முன்போலவே இப்போதும், இனிமேலும் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறோம். சென்னை சட்டசபையிலும், மற்ற சபைகளிலும் இராஜாங்கத்தார் நம்மைத் தேர்ந்தெடுத்திருப்பதை நாம் எப்போதும் மறக்கலாகாது. நாம் அநேக சௌகரியங்களை அநுபவிக்காமல் இருந்துவிடுகிறோம். இராஜாங்கத்தோடும் அவர்கள் பிரதிநிதிகளோடும் நெருங்கிப் பழகுவதால் நாம் அநேக நன்மைகளை அடையலாம் நம்முடைய அபிப்பிராயங்களையும், தேவைகளையும் அரசாங்கத்தாருக்குத் தெரியப்படுத்துவதற்கு இம் மகாநாட்டிற்கு அதிகாரம் கொடுக்க வேண்டும். சென்னை சட்ட சபைக்கும் அதற்குட்பட்ட இதர சபைகளுக்கும் நம் பிரதிநிதிகளை இம் மகாநாடே தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வித சுதந்திரத்தை நாம் கையாள்வதற்கு இதுவே தகுந்த சமயம். நாம் ஜில்லா உத்தியோகஸ்தர்களையும் நம்மரபின் முன்னேற்ற ஏற்பாடுகளுக்கு வேண்டிய ஒத்தாசை புரியும்படிக்குக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

நம் எல்லோருக்கும் மேலான அதிபதியாயிருக்கும் கடவுளிடத்தில் நாம் சரியாய் நடந்து கொள்ளாவிட்டால், நம் முயற்சிகள் எல்லாம் பயனற்றுப்போகும். நாம் தனித்தனியாயும், ஒன்றுகூடியும் நேர்மையும் லாபகரமுமான மார்க்கங்களைத் தேடுவதில் நாமெல்லோரும் ஈசனோடும், இறைவனோடும் இகத்திலுள்ள மனிதர்களோடும் இன்புற்று சமாதானமாய் வாழ்வதையே கடைப்பிடிப்போமாக. சுபம்!

——(S)——

* க்ஷத்திரியன். *

தபால் சார்ஜ் உள்பட இரண்டரை அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

யோகம்.

யோகமென்பது நந்தென்னாட்டில் வந்த மதிநுட்பமும்; நன்னாட்டின் பேரணியாக விளங்கிய மகரிஷிகளால் மெய்த்தன்மையையறிந்து கண்டுபிடிக்கப்பட்டதுமான வோர் நூல். இதனால் அநித்ய அற்பம்போல் தோன்றும் மானுட சரீரத்தின் பெருமை விளங்கும். இம் மானுட சரீரம் அதிஅல்ப காலத்தி லொழியுந் தன்மையுளதென்றும், தோலும் எலும்பும்பதிந்த கூடென்றும், ஆன்மாவுக்கு எட்டுணையும் பயனில்லை என்றும் சிற்சில பாமரர் கூறுவர். யோகத்தைச் சிறிது உற்று நோக்கின், அங்கு அற்புதங்கள் பல வெளியாகும். இந்தச் சரீரத்தைக்கொண்டு நீடிய ஆயுள் பெறவும், பற்பல பொருள்களை யறியவும், பல லோக விருத்தாந்தங்களைத் தெரிந்துகொள்ளவும் அநேக அணிமாதி சித்திகளைப் பெறவும், மனதிற் கருதியதைக் கூட்டி முடிக்கவும், இச்சரீர மிருக்கையிலேயே பிறிதொரு சரீரத்திற் புகுந்து அதை நடாத்தவும் இதைப்போன்ற பற்பல சரீரங்களைப் பலவிடங்களில் ஒரே சமயத்தில் அதிட்டித்து ஆட்டவும், மற்றுலகங்களுக்குச் சென்று திரும்பவும், சூரியன் முதலிய ஒளிகளை ஒருவாறு நிறுத்தவும், காலம் நேர்ந்துழி கடவுளுக்கேற்ற தொழிலாகப் படைத்தலைக் கைக்கொள்ளவும் கூடும். மேற்கூறிப்போந்த பல வற்புதங்களும் இந்த யோகசாத்திரத்தைக் கற்றாலன்றி முடியாது. யோகாநுஷ்டானத்தால் மனம் ஒருவழிப்பட்டு நிற்றலால், எல்லாச் சித்திகளும் கைகூடுகின்றன. அவ்விதயோகி வேதாந்த விசாரம் செய்யப்புகுவானேல் அப்பொருள்கள் அவன் மனதை எக்காலும் விட்டு நீங்கா. ஆதலால் யோகத்தை யறிதல் மனதைச் சுத்திசெய்யும் பொருட்டே ஒவ்வொரு தேசத்தவரும் ஏதோ சில சில தத்துவங்களைக் கண்டதாகப் புத்தகங்களிலெழுதி வைத்துக்கொள்ளுகிறார்கள். ஆயினும் எவரும் யோகவிஷயத்தைக் கண்டு முடித்தெழுதினாரில்லை. எத்தேசத்திலும் எப்பண்டிதனும் ஆரியர் தவிர மற்றவரால் யோகத்தைப் பற்றிப் புத்தகமெழுதினவனில்லை. நம் தேசத்தில் ஞானநூல்கள் பலவுள வென்பது எல்லோரு மறிந்திருக்கலாம். நமக்கு எவ்வித சாஸ்திரங்க ளிருப்பினும், ஆரியர்களிடம் பிறந்து அவர்களிடமே வளர்ந்து அவர்களுக்கேற்ற பயனைக்கொடுத்து அநாரியர் வேஷம் பாஷை உண்டி முதலியவைகளைக் கண்டவுடன் ஓட்டம்பிடிக்கும். யோக சாஸ்திரத்தைப் போன்ற உற்ற தோழன் நமக்கு எவனுளான்? இப்பெருநூல் நம் முதறிஞரால் வழிமாறாது கற்கப்பட்டதும் கையாடப்பட்டதும் சீடருக்குபதேசிக்கப்பட்டது மென்க. இக்காலத்தும் சிலவிடம் அதைக் கற்பதுண்டு; சிலவிடம் மனனட்டிப்பதுண்டு; சிலவிட முபதேசிப்பதுண்டு; சிலவிடம் பயன்படுவதுமுண்டு. இவ்வருமையான யோகநூல் வேறெந்த தேசத்திலிருந்தாவதல்லது வேறு எந்த பாஷையிலிருந்து மெடுக்கப்பட்டது மல்ல; மேற்றிசையார் நாடோறும் புதிய யந்திரத்தைக் கொண்டு அவைகளை விருத்திசெய்து வருவதுபோல் உள்நோக்கால் உண்மை அறிந்து இச்சரீரத்தின் நிலைமைகளுக்கேற்ற பல வற்புதங்களைப் பயக்கு மின்னூலை அம்முதறிஞரே கண்டெழுதினர். இச்சாத்திரத்தைப் படித்த பல மேற்றிசைப் புலவரும் வியப்படைகிறார்களென்பதில் ஆச்சரியமென்னை? மற்றவர்பாஷைகளில் இந்நூலின் பெயரே அகப்படவில்லை. ஆதலால் அவர்கள் இதே விகுதி ஒழித்து "யோக" எனச் சொல்லிவருகிறார்கள். இனிப் பிறர் பாஷைப் பேராசை கொண்ட சிலர் அவருடைய சொல்லையே இவரெடுத்து வேற்றுமை காட்டி ஆரியர்கள் வழங்குகிறார்களென்னச் சாற்றுவரேல், அவர்களை "இதன்பகுதி எது? விகுதியாது? அவற்றின் பொருளென்னை? அதன் வழி என்னை? ஏனைய சொற்களுண்டா? உமது பாஷையில் இச்சொற்கு முன் வழக்குண்டா?" என்பனாதி வழக்குகளைத் தொடுத்து வாயை யடக்கி விடுவோம். எமக்குள்ள முதநூலாகிய

முதல்வன் திருவாக்கே ஞானம், கன்மம், யோகம், இம்மூன்றையும் பற்றிப் பலவிடம் எடுத்துப் புகழ்கின்றது. இந்த யோகம் முக்கியமாய் மனதாலும், ஆரோக்கியம் பெற்ற சரீரத்தாலும், கல்லுண்டியாலும் நன்னீராலும் மற்றும் காற்று முதலிய நல்லியற்பொருளாலும் முற்றுப்பெறும். இவற்றுள் தேகவேற்றுமைகளுண்டாயினும் பொதுவாக "யோக மென்பது மனத்தையோர் வழிபடுத்த" லென யோகநூல் முதலாசிரியராகிய ஸ்ரீ ஆசிரியர்பதஞ்சலியார் உரை செய்தார். அதற்கு வார்த்திகமெழுதியவரும் யோக கீதையை யருளியவருமான ஸ்ரீ யாக்கியவல்கியர் "ஜீவனும் பரனும் சேருதலே யோக" மென யோகப் பதப்பொருளுரைத்தார். இஃதன்றி சிலர் கடவுள் வழிபாடே யோகமெனவும் கூறுவாராயினர். இவைகளுள் துணிந்த யோகப்பதம் பொருளைப்பற்றி எழுதுவாம்.

யோகமென்னுஞ் சொல் "யுஜி" என்னும் முற்று வினைப்பகுதியின்கண் தோன்றி 'தத்துவத்தில் மனதைச் சேர்ப்பான்" என்பதாதி சுருதி வாக்கியங்களால் பொருளுரைக்கப் பெற்ற மனதின் வியாபாரத்தை யொழித்துப் பரம்பொருளிடங் கலத்தலைப் பொருளாய்க் கொண்டு முடிந்தது. இப்பொருளையே மனதிற் கொண்டு ஆசிரியர் பதஞ்சலிபகவான், மகாசாரியயோகீசுவர யாஞ்ஞவல்க்கிய முனிவர் ஆகிய இவ்விருவரும் முறையே 'யோக' மென்பது மனத்தின் பிரவிருத்தியைத் தடுத்தல்" என்றும், "ஜீவான்மா பரமான்மா இரண்டின் செயற்கையே யோக" மென்றும் அச்சொற்குப் பொருள் கூறினர். இவர்களுள் யோக சாஸ்திரத்தின் முதலாசிரியரான ஸ்ரீ பதஞ்சலி பகவான் மனோவசீகரணமின்றிப் பரம்பொருளிற் கலத்தலென்னும் யோகம் சித்தியாது பற்றி அதற்குக் காரணமான இயமமுதலிய அங்கங்களைக் குறிக்க வெழுந்த யோக சாஸ்திரத்தின்கண் யோகமென்னுஞ் சொல்லை ஆகுபெயராகக்கொண்டு யோக காரணத்தையே யோகமெனக்கொண்டார். யோக கீதாசாரியரான யாஞ்ஞவல்கியர் யோகமென்னுஞ் சொற்குச் செம்பொருளுரைத்தார். ஆயின் பின்னாசிரியருரைத்தது செம்பொருளு முன்னாசிரியருரைத்தது ஆகுபெயருமெனக் கொள்க. இனி அன்பு முதலிய நற்குணங்களும் பரம்பரையில் மனத்தை யோர்வழிபடுத்திக் கடவுளிடம் ஆன்மாக்களை யொன்று சேர்க்குமாதலின், அவையும் குறிப்புப்பொருளாக யோகமென வழங்குவதுண்டு. ஆதலாற்றான் அக்காரணம் சாங்கிய யோகங்களா லறியப்பாலதெனச் சுவேதாசுவதரோப நிடதங் கூறியதறிக.

———(s)———

திருப்போரூர் தேவஸ்தான விஷயமாக கலெக்டருக்கு தாசில்தார் விசாரித்து அனுப்பிய ரிபோர்ட்டு.

மேஸ்தர், ஆர்த்தர், பிரிசுசாயபு அவர்கள் சமூகத்துக்கு சேக்கு இமாம்சாயபு தாசில்தார் தாலூக்கா திருப்போரூர்-1841 வருஷம் அக்டோபர் மீ 10உ திருப்போரூரிலிருந்து; இப்பவும் இதில் கண்ட அர்ஜி யென்னவென்றால், சென்னப் பட்டணத்திலிருக்கும் முனியப்பகிராமணி வகையறாக்கள் திருப்போரூர் தேவஸ்தானத்தைக்குறித்து கல்வெட்டுகளுடனே யெழுதிக்கொண்ட அர்ஜி யென்னவென்றால்; உகும்பிரகாரம் ஷை சங்கதி கோயில் குருக்கள் மார்களையும், விசாரணை செய்யும்போது திருப்போரூர் பங்குனிமேடு இரண்டு கிராமங்களும் பூர்வத்தில்சாணாருடையதென்றும் அவர்களுக்கும் பள்ளிகளுக்கும் கிராம மிராசைக் குறித்து வியாச்சியம் வந்து ஷை கிராமங்களை ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமியாருக்கு தானம் செய்துபோட்டதாயும் ஷை சாணாரில் பெரியோர் 6000 7000 ரூபாய் செலவுசெய்து கோபுரத்துக்கு யெதிரில் 16 கால் மண்டபம் கட்டியிருக்கிறதாயும் பிரம்ம உச்சவத்தில் யெட்டாந்திருவிழா (12) பன்னிரண்டாந் திருவிழா (5) ஐந்துநாள் வசந்த உற்சவம் வருஷா வருஷம் செய்து

வருகிறதாயும் இப்போது சுமார் (2000) இரண்டாயிரம் ரூபாய் சிலவுசெய்து வசந்த மண்டபம் கட்ட ஆரம்பித்து சுமார் (500) ஐந்நூறு ரூபாய் சிலவுசெய்து கண்ணாடிகளினாலே இந்திரவிமானம் செய்து வைத்திருக்கிறது. வருஷந்தோறும் சேட்குளோப்பு துணி முதலானதும் சுமார் (70) யெழுபது ரூபாய் சிலவு செய்து சுவாமிக்கு விமானம் ஜோடிச்சிக் கொள்வதாயும். க்ஷத்திரவட்டம் சுவாமி உச்சவத்தில் வரப்பட்ட பிரஜைகளுக்கு பட்டி சக்கரை வினியோகம் செய்துக்கொண்டு வருகிறதாயும் இந்தப்படிக்கு தர்மம்செய்துக்கொண்டு வருகிறதாயும் தவிர முன் தர்மகர்த்தா (5) ஐந்தாம் பட்டத்து முத்துக்குமார தம்பிரான் காலையில் ஜாமீன் சொல்லிவைக்கும்படி சர்க்காரில் ஜாமீன் கேழ்க்கையில், சென்னப்பட்டணம் நமசிவாய செட்டியார் வகைராவில் ஜாமீன் கொடுத்து அவர்களுடைய மனுஷாளை கூடவைத்து பார்க்குமளவில் ஷை ஜாமீன்தார் தம்பிரான் பேச்சு நாடவொட்டாமல் தொந்திரவு செய்ததின்பேரில் தர்மகர்த்தா சர்க்காரில் பிரயத்தனம் செய்து ஷை ஜாமீனைத் தள்ளிப்போட்டு அப்போது ஷை ஜாமீன் சாணுரைக் கொண்டு சர்க்காரில் ஜாமீன் சொல்லிவைத்து அதுமுதல் (7) யேழாவது பட்டம் வரைக்கும் நடந்துவந்ததாயும் ஷை பட்டம் சிவசங்கர தம்பிரான் காலையில் படித்தரம் முதலானதும் நடப்பிக்க சக்தியில்லாமல் ஷை சாணுர் சகல அலுவலும் கூடயிருந்து உடன்படிக்கை யெழுதி கூடவைத்துக்கொண்டதாயும் ஷை சாணுரில் அப்பாசாமி கிராமணி யென்பவன் கோவில் படித்தரம் முதலானதும் கொடுத்து நடப்பித்து வருகையில் ஷை தம்பிரான் இறந்துபோய் கோயில் சர்க்கார் மாரிபத்தான பின்பு கிராமணியார் போட்ட சுமார் (400) நானூறு ரூபாய் வரைக்கும் வரவேணுமென்று அவருடைய இலாகாதாரர்கள் அர்ஜிகொடுத்து வியாச்சியம் ஆடிக்கொண்டிருந்ததாயும் மேலும் முன்னாலே இருந்த தம்பிரான்மார் கோயிலிலே செம்மையாயிராததினாலே ஷை கிராமணிகள் அஜாரில் அர்ஜி கொடுத்ததின் பேரில் ஷை கோயில் திருவாபரணம் வகையராவை பத்திரம் படுத்தும்படி சாணுர் ஆதீனக்கோயிலென்றும் 1827 ஆகஸ்டுமீ 8-தேதியில் 22கெ நாக்கித்து பிரந்திருக்கிறதாயும் அந்தப்படிக்கி ஷை தம்பிரான் கேட்டு தெரிந்துக்கொண்டு மேல்விசாரணை செய்துக்கொண்டு வந்ததாயும் தெரியவருகிறது. அவாளுடைய பெரியவாள் அனேக தர்மம் செய்துவரப்பட்டவாளானபடியினாலே சென்னப்பட்டணத்தில்..................

....

......திருப்போரூர் தர்மத்துக்காக யேர்படுத்தி அதில் வசூலாகப்பட்ட பணத்தை இப்போ மேல்கண்ட தர்மங்கள் செய்து வருகிறதுமல்லாமல் இன்னம் சுமார் (2000) இரண்டாயிரம் ரூபாய் வரைக்கும் மிஷ்ட்டேட்டு வைச்சியிருக்கிறதாயும் இப்போது ஷைபார்களை தர்மகர்த்தாவாக யேற்படுத்தினால் ஷைகோயிலுக்கு இருக்கப்பட்ட வரும்படியும் இன்னம் வேண்டியதற்கும் தர்மம் செம்மையாய் நடந்துவருமென்றும் அதினாலே கோயில தெரிசனத்துக்கு வரப்பட்டவாளுக்கும், கோயிலைச்சார்ந்தவாளுக்கும் யாதொரு விரோதமில்லை யென்றும் தெரியவருகிறது. அப்படி நேமித்தால் கோவிலிலிருந்து விசாரணை செய்வதற்கு ஒரு தம்பிரானை யேர்ப்படுத்திவைத்து மேல்விசாரணைக்கி கோவில் திருவாபரணம் வகையரா உத்திரவாதத்துக்கும் தர்மம் நடப்பிச்சுக் கொண்டு வரப்பட்டதுக்கும் கிராமணிகளோ தர்மகர்த்தாவாய் யேர்ப்படுத்தலாமென்றும் ஷை சர்க்காருக்கு அடங்கினவாளானபடியால் தெரிசனத்துக்கு வரப்பட்ட ஜனங்களுக்கு யாதொரு விரோதமிருக்க மாட்டாதென்றும், தர்மம் சாசுவதமாய் நடந்து வருமென்றும் தோணுது தர்மகர்த்தா அவர்கள் பரமானுல் கோயிலைச்சேர்ந்த அர்ச்சகர்களுக்கு மாத்திரம் ஷை யாரை தர்மகர்த்தாவாய் யேர்ப்படுத்துகிறது விரோதமாயிருக்கிறது. மைத்தபேர் ஷை சாணுரைவைத்தால்தர்மம்செம்மையாய்நடக்குமென்று கையீத்து யெழுதி கொடுத்திருக்கிறார்கள். ஷை குருக்கள்மார் யெழுதிக்கொடுத்த உடன்படிக்கை தாங்கள் பார்க்க எல்லாசங்

கதியும் தெரியவரும். ஷை யார்கள் பெருங் கூட்டமாய் இருக்கிறபடியினுலேயும் தர்மம் செம்மையாய் சாசுவதமாய் நடப்பிப்பார்கள். இதுவுமன்னியில் கோயிலில் இருக்கப்பட்ட சிலாசாதனத்தைப் பார்க்க கோயிலுக்குள் சன்னதி மதிலில் ஒரு கல் சிலாசாதனம் 4—5—6 7, யெழுதியிருக்கிறது. அதில் இரண்டு மூன்று கல்லில் ஒவ்வொரு இடத்தில் உறியினுலே பேர் மறைஞ்சி போகும்படி கொத்திப்போட்டிருக்கிறார்கள் மைத்ததை யெழுதிப்பார்க்கையில் ஒன்றம் தாக்கலாக யிருக்கயில்லை. அதில் சிலயெழுத்து கிரந்தமும் சில யெழுத்து தமிழு மிருக்கிறது. பட்டணத்திலிருந்து சிப்பிகளை அழைப்பிச்சி பார்வையிட்டதிலும் அவாளுக்கு அதிலுடைய வயணம் அகப்படவில்லையே பந்துகட்டி யெற்படுத்தி யிருக்கிறாரோ அது தெரியவில்லை. அதற்கு கல் வரிசைபாயி ரெம்பர்போட்டு அதற்கு சரியான நகல் தயார் செய்து அதையும் அதுரிலிருந்து வந்த நகலிது நகல் படிக்கு இவ் விடத்திய காகிதத்துடனே 12-வது நெ அசல் காகிதத்தையெடுத்து அதற்கு நகலும் ஷை சந்நதியில் குருக்கள்மார்களிடத்தில் வாங்கின சைபத்து அதுரிலிருந்து வந்த தஸ்த்தாவேசு ஆக தஸ்த்தாவேசு யெழுதி அனுப்பியிருக்கிறேன். இந்தம் அறியவேண்டியது.

தம்பிரான் ஐயோக்கியனென்று பிடிஷன் வந்ததைக்குறித்து தேவஸ்தானத்தையும் அதைச்சேர்ந்த சொத்துகளையும் குழந்த கிராமணி வசம் ஒப்பிக்கும்படி உத்திரவானது.

திருப்போரூர் தாசில் நாராயண ஐயருக்கு யெழுதிய தரில்லா.

1827 ஆகஸ்டுமீ 8-ந்தேதி யேக்காட்டுர் குழந்தை கிராமணி யெழுதியது.

திருப்போரூர் ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமிக்கு அவர்கள் வமிசத்தார் கிராமத்தை சுவாமிக்கு நித்தியபடித்தரம் முதலானதுக்கும் தத்தம் பண்ணி யிருக்கிறதாயும் ஷை தேவஸ்தானம் திருவாபரணம் வகையராக்களுக்கும் ஜாமீன் கொடுத்திருக்கிற படியினுலேயும் தர்மகர்த்தா உடனே கூடயிருந்து சகல காரியமும் பார்த்துக்கொண்டு வருகிறேனென்று நம்முடனே சொல்லிக்கொண்டபடியால் அதினுல் உனக்கு ஆச்சரியமென்ன தென்னவென்றால் ஷை தம்பிரான் ஐயோக்கிய யெங்களுக்கு தோணப்பட்டபடியால் ஷை தேவஸ்தானம் திருவாபரணம் முதலாகியதும் குழந்தை கிராமணி வகையரா மாரிபத்தில் ஒப்பித்து தம்பிரான்பேரில் வந்திருந்த பிராது அர்ஜியை தரியாபத்துசெய்து அனுப்பிவைக்க வேண்டியது.

தாக்கீது அரியவும்
1827 - ஆகஸ்டு - 8-ந்தேதி.

சுப்பிரமண்ய சுவாமியார் திருவிளையாடல் தேவஸ்தான கிராமங்கள்.
வியாச்சியப்பட்டு தீர்ப்புபண்ணது.

மன்மத வருஷம் ஆவணிமீ 13உ செங்கழுநீர்பட்டுசீமை செங்கோல் முத்திரைக்கு கர்த்தரான தளவாய் யக்களப்பன் நாய்க்கர் அவர்கள் சமூகத்திலே திருப்போரூர் ஸ்தளத்து தர்மத்திற்கு ஆதீனகர்த்தராகிய தம்பிரானுடனேஷையூர் பள்ளிகள் சாணூர் ஒருவருக்கொருவர் சுவாமி திருவிளையாட்டு கிராமங்களை குடிக்காணி தங்களுதென்று சச்சரவுபட்டு நாய்க்கர் அவர்கள் சமூகத்திலே முரியெழுதிக் கட்டின போது தம்பிரானவர்கள் திருவிளையாட்டு கிராமங்களுக்கு சிலாசாதனமாய் சுவாமிக்கு தானம்பன்னி கல்வெட்டும் பிறந்திருக்கிறதென்று சொன்னபடியினுலே நாய்க்கர் அவர்களுத்தாரப்படிக்கு கோவில் பூஜைபண்ணுகிற குருக்கள்மார்களையும் தையூர் முதலிமார்களையும் அனுப்பிவைத்து கல்வெட்டை பார்க்குமாவில் கல்வெட்டுபடிக்கு யெழுதினது.

சாலிவாகன சகாப்தவருஷம் 1429-க்குமேல் செல்லாநின்ற சுபானு வருஷம் தைமீ 9-ந்உ பூர்வபட்சம் பவுர்ணமி பூஸ நக்ஷத்திரமும் பெற்ற நாளில் ஜெயங்கொண்ட தொண்டைமண்டலத்தில் சந்திரகிரி ராஜ்ஜியமான செங்கழுநீர் பட்டுசீமையில் தையூர் மாகாணத்தில் மின்னலுக்கு கிழக்கு கண்ணப்பட்டுக்கடுத்த தெற்காகிய திருப்போரூர் சுப்பிரமண்ய சுவா

மியார் வால்மீகீஸ்வர சுவாமியார் அவர்களுக்கு நூக்கம் திருப்போரூர் கிராமணிகளில் முருகன் தாண்டவப்பன் நயினுன் உள்ளிட்டாரும் யெங்கள் காணியாக்ஷியான நூக்கத்து இயல்லை யான திருப்போரூர் பங்குனிமேடு உள்பட இந்த இரண்டும் கிராமமடங்களும் சுவாமிக்கு தேவதானமாகத் தானம்பண்ணிக் கல்வெட்டும் போட்டுக்கொடுத்தோம். யெங்களை மனப்பூர்வமாய் சுவாமிகளுக்கே கொடுத்த தானப்படிக்குச் சந்திராதித்தருள்ளவரைக்கும் தானாதிவிக்கிரயங்களுக்கும் யோக்கியமாகவே அனுபவித்துக்கொள்ளக் கடவிராகவும். இந்ததர்மத்திற்கு யாதாமொரு விகாதம் பண்ணினுல் காசியிலே கெங்கையிலே தப்பிதம் பண்ணவர்களிலே போகக்கடவோர்களாகவும் இந்தப்படிக்கு சம்மதித்து சுவாமிகளுக்கு தானம் கொடுத்தோம். இப்படிக்கு முருகன் தாண்டவப்பன் நயினுன் உள்ளிட்டாரும் யெழுதியது.

இந்த கல்வெட்டுபடிக்கு யெழுதின நன்மைக்கு ஊர்கணக்கு அனந்தாரி யெழுத்து.

இப்படிக்கு மணிய குருக்கள் யெழுத்து
உத்தண்ட வினைதீர்த்தான் யெழுத்து
சடையப்பன் யெழுத்து.

தேவஸ்தானத்துக்கு நித்தியபடித்தரம் முதலானதும் நடத்திவந்ததற்கு சாதனம்.

சுவஸ்ஸ்ரீ விசையார்ப்புத சாலிவாகன சகாப்தம் வருஷம் 1743 கலியுகாப்தம் வருஷம் 4923 பிரபவாதிகதாப்தம் வருஷம் 14-க்கு மேல் செல்லாநின்ற விஷு வருஷம் கார்த்திகைமீ 21-தேதி பூர்வபக்ஷம் செவ்வாய்க் கிழமை தெசமி உத்திரட்டாதி நக்ஷத்திரமும் சித்தனுமயோகம், தையித்துலாகரணமும் இப்படி கூடின சுபதினத்தில் ஜெயங்கொண்ட தொண்டைமண்டலத்தில் சந்திரகிரி ராஜ்ஜியத்தில் செங்கல்பட்டு சீமையில் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகராகிய வள்ளி தெய்வானைச் சமேதராகிய திருப்போரூர் சுப்பிரமண்ய சுவாமியார் அவர்கள் சன்னிதானத்தில் நித்திய உற்சவம் பஞ்சபர்வம் பிர்ம உச்சவ உபயம் விசேஷ காலங்கள் திருப்பணி முதலாகிய தர்ம கயிங்கரியங்கள் நடக்கவேண்டியதுக்காக தண்டையார் பேட்டை, சென்னப்பட்டணம், திருவல்லிக்கேணி, திருமைலாப்பூர், சிந்தாதிரிப்பேட்டை, பெரியமெட், சூளை புரசவாக்கம், திருவொற்றியூர், காலாடிபேட்டை இதுகளிலே யிருக்கும் கிராமணிகள் அனைவரும் யேகோபித்து மனப்பூர்வமாய் யெழுதிக்கொடுத்த மகிமை தானப்பத்திர்கை யென்னவென்றால் மேல்யெழுதிய திருப்போரூர் சுப்பிரமண்ய சுவாமியார் அவர்களுக்குத் தர்ம கயிங்கர்யம் நடக்கும்படியாய் நம்மிட காணியாட்சி கிராமமான திருப்போரூர் நம்மிட கிராமபிராசை பூர்வீகம் நம்மிட பெரியவர்கள் தத்தம்பண்ணி யிருக்கிறபடியினுலேயும் நாளதுவரைக்கும் அந்த தர்மத்தை பரம்பரையாய் நம்மிட பெரியவர்கள் நடப்பிச்சுக்கொண்டு வருகிறபடியினுலேயும் இப்போ மேலெழுதிய கிராமங்களில்.................................

....

திருப்போரூர் சுப்பிரமண்ய சுவாமியார் அவர்கள் திருமுகத்தைப்பார்த்து ஆர் மாகாணை சிப்பந்தி சிலவுயில்லாமல், தண்டல் கணக்கப்பிள்ளைகளாலே வசூல்செய்து சென்னப்பட்டணம் அருணுசல கிராமணியிடத்தில் கணக்கும் முடிப்பும் சேரும்படியாயும் அதற்கு வேண்டிய சகல ஒத்தாசையும் புதுப்பாக்கம் குழந்தை கிராமணி செய்யும்படியாயும் மேலெழுதிய கிராமத்தார் அனைவரும் நிர்ணயம்பண்ணியிருக்கிறபடியினுல் இந்தப்படிக்கு வசூலாகிய பணமும் கணக்கும் மேலெழுதிய கிராமத்தார் அனைவருக்கும் அருணுசல கிராமணி உத்திரவாதியாய் கிராமத்தாரவர்களுடைய தஸ்தாவேசு கட்டிக்கொண்டு திருப்போரூர் சன்னிதானத்து ஆதீன தர்மகர்த்தாகிய முத்துக்குமார தம்பிரானவர்கள் முன்னிலைக்கு சகல தர்மங்களும் நடப்பிச்சுக்கொண்டு வருகிறது. மேலும் ஸ்ரீ அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகராகிய திருவொற்றியூர் தியாகராய சுவாமியாரவர்கள் திருமஞ்சனம் பூந்தோட்டம் சத்திரம் கிராமணிகளுடைய தர்ம கயிங்கரியங்களுக்கு நடந்துவருகிறபடிக்கு திருவொற்றியூரில் ... ... யாதொரு விகாதமுமில்லாமல் நடப்பிச்சுக்கொண்டு வருகிறது. இந்தப்படிக்கு யெங்கள் அனைவருடைய மனராஜியில் மனப்பூர்வீகமாய் யெழுதிக்கொடுத்த மகிமை தானப்பத்திரிக்கை.

லீடர் போட்டயிடம் செல்லடிக்கப்பட்டது.

புண்டாரத்தரித்தல்.

ஐயா! புண்டரத்தைப்பற்றி வரையவேண்டியது முறை. இத்தேசத்தில் இஃது இருவகையுடைத்து. சிலர் குறுக்கிடுவர், சிலர் நெடுக்கிடுவர். இதில் முன்சொல்லியது ஒரே வழியாகயிருக்கும். பின்சொல்லியது பலவிதம். இவ்வித இரண்டு புண்டரங்களும் கன்மங்களுக்கங்கம். பெரும்பான்மையில் எவ்வித கன்மங்களும் அம்புண்டரங்களில்லாவிடம் கூறிய பயனைப் பயக்கா. அதற்குக்காரணம் பின்னெடுத்துரைப்பாம். அவரவர் தத்தம் வழிபடு கடவுளாரது திருச்சின்னத்தைத் தாம் தரிக்கவேண்டுமென்னும் நியாயம் கொண்டு பரமசிவ மூர்த்தியை வழிபடு மியல்பினர் திருநீற்றையும், கமலக்கண்ணனார் கழலினை யடைந்தோர் திருமண்காப்பையும், கோபிசந்தனத்தையும் செஞ்சந்தன முதலிய பல பொருள்களையும் உபயோகிக்கின்றனர். அவற்றுள் சைவர் கொண்ட திருநீற்றுக்காப்பு உள்வேற்றுமையற்ற ஒரே வழி நின்றதாதலின், அதன் பெருமையை முன்னர் விளக்கிப் பின் மற்றைய புண்டரங்களைப்பற்றிச் சொல்வாம்.

திருநீற்றுக்காப்பு, திருபுண்டரம் என ஒக்கும். திருநீற்றுக்காப்பென்பது நீற்றாலமைந்த புண்டரமாதலின், திருபுண்டரமென்பது மூன்றுகோடு வடிவாயமைந்தது.

திரியக் புண்டரமென்பது குறுக்கிடுவதால் இது வேதங்களில் ஏற்பட்டுபநிடதங்களால் விதிக்கப்பட்டது. பல தர்மசாஸ்திரங்களிலும் இதைப்பற்றி வியந்து பேசப்பட்டுள்ளது. இம்மூன்று ரேகைகளை இட்டுக்கொள்வதும் அத்திருநீற்றை யுண்டாக்குவதும் இன்ன கருத்தைக் கொண்டதென விரிவாய் உபநிடதங்கள் கூறுகின்றன. அதன் சுருக்கம் யாதெனில்:— பசுபதியினது பேரருளால் அச்சிவாக்கினியில் பசுக்களின் மலத்தை வாட்டி அதனால் நிர்மலத் தூய்மை பெற்று மூன்றாக நின்று உலகப்பொருளனைத்தும் ஒழித்து அதீதப் பழம்பொருளை யடைவதே மக்களுக்கு மாண்பென்பது. குணங்களில் தமஸ் என்பது ரஜஸ்ஸிலும், ரஜஸ் ஸத்துவத்திலடங்குமென்னு முறையும் இதிலடங்கியிருக்கின்றது. இம்முறைகளையெல்லாம் ஜாபாலோபநிடதம் வியக்தமாய் ஓதியதை யறிக. ஆக்களின் மலம் அக்கினியிலிட அதுவே திருநீறாகிறது. அதில் நக்கை பத்திரை முதலிய பல பசுஜாதிகளுண்டு. அவை மல முதலியவற்றையுட்கொள்ளாது நல்ல புல்லுகளை யுட்கொள்ளும் சில முள்ளன.

ஜீவர்களிடமமைந்த மலம் அநாதி மலத்தை வெளியில் இப்பசுக்களின் மலமாக உருவகப்படுத்தி அவைகளைபரசிவாக்கினியிடம்விட்டுத் தகித்தால் அதனிட மமைந்த கருமைநிறம் நீங்கி அக்கினியுடன் கூடியகாலத்து செந்நிறந்தோன்றி இறுதியில் வெண்மைநிறம் தோன்றுகிறது. பசுக்களிடமமைந்த அநாதி மலம் கண்ணுதலார் கருணையின்றி ஒழியாதென்றும் அவனாற்றான் அது எரிக்கப்படுமென்றும் ஆன்றோர் கருதியது.

அது சுட்டபிறகு தூய்மையே மிகுதியாமென்பது வெண்ணிறத் திருநீறிட வேண்டுமென்பதின் கருத்து. அம்மலம் ஆக்களின் சரீரத்தில் ரோசனம் என்னும் பித்தத்தால் பரிபாகமடைந்த நற்புல்லுகளின் விகாரமாதலால் பால்நெய் முதலிய உலோகோபகாரப்பொருள்கள் நிகழும் சரீரத்தினின்று வெளிப்பட்டு பேராற்றல் பெற்று நிற்கின்றது. ஆதலால் மூன்று தினங்களுக்கு முன்னரே ஆக்களை நற்புல்லூட்டி வளர்த்து மூன்றாந் தினத்திற்குப் பிறகு அவ்வாக்களின் மலத்தைப் பூமியில் விழுமுன் வெள்ளி முதலிய லோகபாத்திரங்களில் ஏந்திவைக்கவேண்டும். பூமியில் விழுந்தால் அதிலுள்ள பேராற்றல் பூமியின் மண்ணால் இழக்கப்படுமென்றறிக. ஓர் சமயம் கைதவறி கீழேவிழுந்தால் கீழே விழுந்ததைத் தள்ளி மேல்பாகத்தைச் சேர்த்துக் கொள்ளலாம். அதில் பால் தயிர் நெய் கோமூத்திரம் இவைகளையும் கலக்கவேண்டும். பால் தயிர் நெய் இவற்றின் குணம் எல்லோருமறிந்ததாயினும் கோமூத்திரத்தின் குணத்தை லவத்தி

யத்திற்றான் காணலாம். அது காச்சின எனும்
பைத் தூளாக்கும் அதிஸ்தூல ரோகத்தையு
மபகரிக்கும். அவ்விதம் உருட்டின உண்டை
களை அக்கினியில் பரமேசுரனைப் பாவித்து
அக்கினி யிட்டுக்கொளுத்த வேண்டும். அந்த
நெருப்பில் பதரை யிடவேண்டுமே யன்றி உமி
யேனும் நெல்லேனு மிடக்கூடாது. அதனுட்
கருதியாதெனில் பற்பல ஜன்மங்களையும் பல
துன்பங்களையு மனுபவித்து அதில் ஒழிவுண்
டாகி சத்குரு கிருபையால் நல்லறிவு பெற்றும்
பிராரப்த விஷேசத்தால் ஓர் சரீரமெடுத்து
மறுபிறப்பில்லா நிலைமையில் சாமஜன்மம் பெற்
றவர் அப்பரமசிவ பேரொளியிற் கலந்து மகா
பஸ்மயோகம் பெறுவா ராதலின், அதைக்
குறிக்க நெல்லுடன் கலந்து பிறந்தும் மீண்டு
முளையா நிலைமையில் நிற்கும் பதரையே
நெருப்பிலிடுவது. அதனின்றெடுத்த திருநீற்
றைத் தலைமுதலிய விடங்களில் தரிக்கவேண்
டும். ஜாக்கிரம் சொப்பனம் சுஷுப்தி என்னும்
மூன்றவத்தைகளும் ஆன்மாக்களுக் குண்டாகு
மென தாபநீயோபநிடதங் கூறுகின்றது. கொப்
புள், மார்பு கண்டம், நெற்றி ஆகிய இவை முக்
கியஸ்தானங்கள் மற்றோர் சுருதியில் தலை,
மார்பு, நெற்றி, கழுத்தென நான்கு விடங்கள்
கூறப்பட்டன. ஆயினும் ஸ்மிருதிகளும் புரா
ணங்களும் சந்திகளையும் கொப்புள் முதலிய
விடங்களையுங் குறித்தமையால் அங்கு விபூதி
யிடல் குற்றமாகாது. இனிச்சந்திகளிற் கபந்
தங்கி நிற்றலால் திருநீற்றின் வலுமை அங்கு
அதிகம் உட்செல்லுமென்பது பௌராணிகர்
கூற்று. இனிச் சரீரத்தின மயிர்க்கால் வழி
மலங்கள் வெளிவருவது இயல்பாதலின், அங்கு
திருநீற்றைப் பூசவேண்டும். இந்த ஹோமங்
களுக்கு உபயோகமாகு மந்திரங்களுக்கு விர
ஜாமந்திரமெனப் பெயர். அம்மந்திரங்கள் பாவ
த்தை யொழித்துப் பரசிவத்துடன் கலக்கும்
வழிகளைக் குறிக்கின்றனர். இனி இவ் விதி
யறிந்த எவர்க்கும் திருநீற்றைக் கண்டவுடன்
அம் மந்திரப்பொருள் மனதிற்படும். இனி
அதை மூன்று கோடுகளாக எழுதுவது, உல
கம் பலவழியில் முப்பொருளாப் பகுக்கப்பட்ட
தெனவும், அதையறிவது நீண்ட நாதத்தா
லெனவுங் குறிக்கவே அம் முப்பொருள்கள்
எவையெனில், சுருதிகளிற் கூறியவற்றைச்
சுருக்கிக் காட்டுவோம். ஜடம், ஜீவன், பரன்
மும்மூர்த்திகள் முக்குணங்கள், மூன்றவத்தை
கள் விசுவன் தைஜஸன் ராஜஸன் என்று அவ்
வவத்தாபிமானிகள் ஞாயிறு திங்கள் அக்கினி
என்று மூன்றொளிகள். பிரணவத்தின் மும்
மாத்திரைகள் ஆணவம் கார்மணம் மாயேயம்
என்னும் மும்மலங்கள். மூன்று வியாகிருதிகள்
மூன்றக்கினிகள் மூன்று வேதங்கள் போக்தா
போக்யம் ப்ரேரிதா என மூன்றறியப் படு
பொருள்கள். வித்தை அவித்தை ஸம்வித் என்
னும் மூன்று அறிவுள் உத்தமன், மத்தியமன்,
அதமன் என்னு மூன்றதிகாரிகள். மிருது மத்
தியம் தீவ்ரம் என மூன்றுபாகங்கள். இச்சை,
ஞானம், கிரியை என்று மூன்று சக்திகள்.
காயாத்திரியின் பாதங்கள் மூன்று அடிநடுமுடி
என விடங்கள் மூன்று சென்றது நிகழ்வது
வருவது எனக் காலமூன்று. தூலம் சூக்குமம்
காரணமெனச் சரீரமூன்று. இனிச் சுருக்கி
யுரைப்பின் மூன்றிலடங்காப் பொருளொன்று
மில்லை. ஆதலாற்றான் பன்மையே மூன்றைக்
குறிக்குமென வடநூலாசிரியர் சாற்றுகின்றார்.
இம் மூன்றென்னும் எண்ணை நம்மவர் மட்டிற்
கணப்படுத்தினாரில்லை. தேசாந்திரங்களிலும்இம்
மூன்றென்னு மெண் வெகு பரிசுத்தமாக வழங்
கப்பட்டு வருகின்றது. ஆயின் இத்திரு புண்ட
ரத்திற்கு இவ்வெண் அமைந்ததே ஒரு பெருக்
கம் எனக்கொள்க. தாபத்திரயமென்னு மிடத்
திலும் இவ்வெண்ணிருக்குமே எனின், அதை
யொழிக்கும் கன்மத்திரயம், சமனத்திரயம்
அதே எண்ணிருத்தலால் அவ் வெண்குற்றங்
களையும் குணப்படுத்துந் தன்மையதே என
அதன் பெருமையில் ஓர் சிறுபான்மையைக்
கூறினுமென்க. இனி வேறு புண்டரங்களைக்
கொண்டவர்களும் தமது புண்டரத்தையும்
திருபுண்டரமென்னும் வழக்கத்தை "திருபுண்
டரத்தைத் திருநீற்று லமைக்கவேண்டு" மென்
னும் வேதவாக்கிய மறுக்கின்றதாயினும் அவ்
வெண்ணின் பெருமை பசுமரத்தாணிபோல்
காட்டப்பட்டதென்க. இனித் திருநீற்றிற்கு
ஆறுபெயர்களுண்டு. அவற்றைப் பின் எடுத்
தோதுவாம்.

குறும்பர்குல ஆராய்ச்சி.

4—6—1924-ல் சேலம், க்ஷத்திரியனில் வெளியானது.

தொல்காப்பியம் அகத்திணையியல், புறத்திணையியல்களை இதுவரை ஆராய்ந்தோம். இனி மரபியல் சூத்திரங்களில் அவர்களைப்பற்றிய குறிப்புகளை விளக்குவாம்.

மரபியல்.

வில்லும் வேலுங் கழலுங் கண்ணியுந்
தாரு மாரமுந் தேரும் வாளு
மன்பெறு மரபி னேனோர்க்கு முரிய ... 89.

இது முடியுடை வேந்தரல்லாக் குறுநில மன்னர்க்குரியன கூறுகின்றது.

(இ-ள்) இவ் வெண்ணப்பட்டன வெல்லாம் குறுநில மன்னர்க்கு உரியன. (எ-று.)

மன்பெறு மரபின் ஏனோ ரெனப்படுவோர் அரசுபெறு மரபிற் குறுநில மன்னர் எனக் கொள்க. அவை பெரும்பாணாற்றுள்ளும் பிற வற்றுள்ளும் காணப்படும்.

தொல்காப்பியச் சூத்திரத்தையும் அதற்கு நச்சினார்க்கினியர் உரையையும் மேலே காட்டியுள்ளோம். மேற்படி சூத்திரத்தாலும் உரையாலும் நாம் அறிந்துகொள்ளவேண்டிய விஷயங்கள் அநேகமா யிருக்கின்றன. 'மன்பெறு மரபு' என்னுஞ் சொற்றொடர் நன்றாய் ஊகிக்கப் படவேண்டும். அரசு பெறும் மரபு எது? வேடர் மரபா? வேந்தர் மரபா? கிராமணிக்கு வேடர் மரபுதான் அரசுபெறு மரபு என்று விளங்குகின்றது. காக்கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூ பொன்னிறம் என்பதுபோல் க்ஷத்ரியராகப் பார்க்கும் இவர் தம்மோடொத்த மற்றவர்களையும் அரசராக்குவதில் விசேஷமில்லை. நாம் முந்தி தெரிவித்தபடி இருவகை மன்னரில் முடியுடை (நெடுநில) வேந்தரை யொழிந்த மற்றவர்களாகிய குறுநில மன்னரையே 'ஏனோர்' சொல் குறிக்கின்றது. ஆசிரியர் தொல்காப்பியனார் அபிப்பிராயமும் நச்சினார்க்கினியர் உரையும் சந்தேகமில்லாதபடி நமக்கு விளக்கும்போது கிராமணிக்குமட்டும் சந்தேக மொழியவில்லை. சந்தேகமட்டுமா? விபரீதம் வரையிலல்லவோ அவர் புத்தி எட்டிவிட்டது. இனி அக்கவியிலுள்ள மற்ற உண்மைகளையும் பார்க்கவேண்டும்.

இடையிரு வகையோ ரல்லது நாடிற்
படைவகை பெறாஅ ரென்மனார் புலவர்

என்னும் 76-வது சூத்திரத்தில் க்ஷத்ரிய வைசியர்க்கன்றி ஏனைய பிராமண சூத்திரர்க்குப் படைவகை யில்லையென்று சொன்ன ஆசிரியர் இச் சூத்திரத்தில் கானகத்திலுள்ளார்க்கு அவையுண்டெனச் சொல்வாரா? வில், வேல், கழல், கண்ணி, தார், ஆரம் இவைகள் குறுநில மன்னர்க்கு முரியவை என்பதால் நெடுநில மன்னர்க்கும் குறுநில மன்னர்க்கும் அவை உரியன என்றேற்பட்டு மற்றையர்க்கு இல்லையென்கின்றது. நெடுநில மன்னர்க்குப்போல் குறுநில மன்னர்க்குச் சில உரிமைகள் கிடையா. அவை புரவி; களிறு, கொடி, குடை, முடி என்பன. வேத விதிப்படி பட்டாபிஷேகம் பண்ணிக்கொண்டு முடி சூடிய வேந்தர்க்கே அவை உரியன. குடிப்பிறந்தும் முடி சூட்டுரிமையற்ற இவர்கள் மேற்படி முடி மன்னர்களால் சிறு ராஜ்யங்களை யாளும்படி நியமிக்கப்பட்டவர் சிலர், முடிமன்னனைப் பகைத்துக்கொண்டு தங்கள் வல்லமையால் நிலங்களை வென்று ஆள்பவர் சிலர், முடி மன்னர்க்குச் சகாயமாய் நட்பு பூண்டு சிறு பகுதிகளை யாள்பவர் சிலர் என இவர்கள் பலவிதம். குறுநில மன்னர்கள் அநேகமாய் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே யிருந்திருக்கின்றனர். ஓர் அரசனுடைய மூத்த புதல்வன் சிம்மாசனத்துக் குரியவனாய் முடிசூடிக்கொள்ள மற்றைப் புதல்வர்களும் தாயத்தார்களும் குறுநிலமன்னரா யிருந்திருக்கின்ற வழக்கம் தமிழ்நாட்டுச் சாசனங்களால் நன்றாயறியலாம். சாசன ஆராய்ச்சி வரும்போது இதை விளக்குவாம்.

வேதியர்க்கு வேளாளர்க்குமில்லா படையுரிமை இவர்கட் கிருப்பதால் இவர்களை வேடரென்று சொல்லிய கிராமணியின் வெற்றிமுழக்கம் வெறிமுழக்கமேயல்லது வேறில்லை. வல்ல

மையால் உலகைச் சமித்து அரசு பெற்றாலும் இதர மரபார்க்கு வில் முதலிய இச் சூத்திரத்திற் சொல்லிய உரிமைகள் கிடையா, என்பதை அடுத்த சூத்திரத்தில் ஆசிரியர் காட்டுகின்றார் அச் சூத்திரத்தையும், அதன் உரையையும் அடியில் எழுதுகின்றோம்:—

"அன்னராயி னுமிழிந்தோர்க்கில்லை" [84]

இஃது எய்தியதிகந்துபடாமைக்காத்தது.

(இ-ள்.) மன்னவர் போலுஞ் செல்வத்தராகி இழிகுலத்தோர் நாடாண்டாராயினும் அவர்க்கு இவை கூறலைமையாது. (எ-று.)

"மன்பெறு மரபினேனோர்"

எனவே அரசர் வைசியரன்றிக் கீழ் அமையாவாயிற்று.

மேற்படி சூத்திரத்தாலும் உரையாலும் வேளாளர்க்கே 'வேல்' முதலியவை கூடாதென்றபோது வேட்டுவர்கள் நாடாட்சி பெறலும் வேல் முதலிய ராஜ சின்னங்கள் பெறுதலும் இலக்கணத்திற்கும் உலகியலுக்கும் முழு விரோதமென்பதும் கிராமணி அறியட்டும்.

வேடர் வேறு, குறுநில வேந்தர் வேறு என்பதற்குத் தொல்காப்பிய நூலிலிருந்து வேண்டிய ஆதாரங்கள் இதுவரை காட்டப்பட்டன. குறுநில மன்னர் உயர் குலம் நான்கில் இரண்டாவது குலமெனவும், வேட்டுவர்கள் ஐந்திணையுட் குறிஞ்சி நிலத்தவர்களென்றும் அந்நூலிலிருந்தே தெளிவாய் விளக்கப்பட்டது. கிராமணிக்கு விளங்கவில்லையென்றால் வேறு நூல் ஆதாரங்களையும் காட்டுகின்றோம். குறுநில மன்னர் க்ஷத்ரியரே, வேடரல்லவென்று கிராமணி ஒத்துக் கொள்கின்றாரா? இல்லையா? இல்லையாயின் மேலெழுதுவதைக் கவனிப்பாராக.

எமது விடை.

எமது நண்பர் அர்த்தநாரீசப்பிள்ளை என்பார் தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல், 60-வது சூத்திரத்திற்கீழ் கூறிய "ஆர் அமர் ஓட்டலும்" என்னுந் தொடரை பிரஸ்தாபித்து, அதற்கு "குறுநில மன்னருங் காட்டகத்துவாழும் மறவரும் போர்த்தொழில் வேந்தரைப் பொருது புறங்கண்டதும்" என நச்சினார்க்கினியர் கூறிய உரையை வெளிக்கிழுத்து, அதன் உட்பொருளை யறியாது, "குறுநிலமன்னர் வேறு, கானகத்து மறவர் வேறு எனக் கூறியிருந்ததைக் காட்டினோம்" என அறியாமையால், அதை யொரு ஆதாரமாகக்கொண்டு கூறி, மறவரிலிருந்து குறுநில மன்னரை வேறுபிரிக்கப் பார்க்கிறார். அப்படிப் பிரித்தல் தவறு என 1924ௗ செப்டம்பர்மீ பத்திரிகையில் மேற்கோளோடு விளக்கியுள்ளோம். இங்கும் அது சம்பந்தமான ஒரு முக்கிய பிரமாணத்தைத் தெரிவித்து அவரது அபிப்பிராயத்தைக் கண்டித்தொழித்து, வேறு விஷயத்தில் செல்லுவாம்.

திருவிளையாடற் புராணம், வலைவீசிய படலத்தில் பார்வதியார் பரவர் தலைவனுக்கு பெண்ணாக வேற்பட்டு வளர்ந்து வந்ததாகவும்; அவ்வம்மையாரை மணக்க சிவபிரான் பரவ ருருவங் கொண்டு வருஞ் சந்தர்ப்பத்தில், பரவர் தலைவன் கடலில் யாராலும் பிடிபடாது துன்பஞ்செய்துவரும் சுறுமீனை பிடிப்பவர் யாரென மனங்கலங்கி யிருக்குந் தருணத்தை விளக்க வந்தவிடத்து கூறிய செய்யுளைக் கவனிப்பாம்.

திருவிளையாடற்புராணம், வலைவீசினபடலம்,
41-வது செய்யுள்.

"ஏவலாளரோ டின்னவா றின்னமீன் படுத்தற்
காவதாந் தொழிலியற்றவு மகப்படா தாக
யாவரேயிது படுப்பவரென் றிருங்கான
காவலாளனும் பரதருங் கலங்கஞ ருழந்தார்"

(இ-ள்.) "ஏவன் மக்களோடு இவ் வகையாக இந்த சுறுமீனைப் பிடிப்பதற்கு ஏதுவாகிய தொழிலைச் செய்யவும் அகப்படாதொழிய, இதனைப் பிடிப்பவர் எவரோ அவரை யுணரேமென்று, பெரிய கழிக்கரையிற்கு அரசனும் பரதரும் பெருந்துன்பத்தி லாழ்ந்தனர்" என்பதாம். இச் செய்யுளில் வரும்;

"காவலாளனும் பரதருங் கலங்
கஞ ருழந்தார்"

என்னும் இத்தொடரில் வரும் "காவலாளனும், பரதரும்" என்னும் இரு வார்த்தைக்கும் உம்மைக்கொடுத்து வேறுபிரித் திருத்தலால், காவலாளன் அரசனும் பரதவர்மீன்பிடிப்பவருமாவரோ? ஏக குலத்தவரல்லரோ? அக்காவ

லாளன் பாதவனேயாயினும், அவன் அவன் வம்ஸத்தவர்களுக்கு தலைமைபூண்டு "வலைஞர் கோன்" என மேற்படி படலம், 6-வது, 24-வது செய்யுள்களில் கூறி, ஒருபடி யுயர்த்தியிருத்தலால், அவனைத் தலைவன் என மதித்து வேறு பிரித்தும், அவர் வம்ஸத்தவர்களை அவனுக்கு உட்பட்டவர் என மதித்து அவனிலிருந்து வேறுபடுத்தியும் கூறியிருத்தலின், அக்காவலாளனை பாதவன் அல்லவெனக் கூறமுடியுமோ? இதைப்போல் "குறுநில வேந்தரும், மறவரும்" எனக் கூறிய நச்சினார்க்கினியர் வாக்கையும் மதிக்க வேண்டுமென வறிவாராக. இதோடு அவன் வம்ஸத்தவர்களை ஏவலாளர் எனப்பட்டிருக்கின்றது. அவன் தலைமையை விளக்குதற்கே அவன் வம்ஸத்தவர்களை ஏவலாளர்கள் எனப்பட்டது பின்னும்,

அர்த்தனாரிசப்பிள்ளை யென்பார் தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியல், 83-வது சூத்திரத்தைத் தெரிவித்து, குறுநில மன்னருக்கு "வில், வேல், வாள், கழல், கண்ணி, தார், ஆரம், தேர்" முதலியவைகள் உரிமையின் அரசரெனக் கூறுகின்றார். இச்சூத்திரம் குறுநில மன்னருக்கு புறனடையாகக் கூறியதேயன்றி, வேறன்று. அரசருக்கு உரியவை இன்னின்னவை என ஷை மரபியல், 71-வது சூத்திரத்தில் கூறியுள்ளன. அஃது வருமாறு:—

"படையுங் கொடியுங் குடையு முரசு
நடைநவில் புரவியுங் களிறுந் தேருந்
தாரு முடியு நேர்வன பிறவுந்
தெரிவுகொள் செங்கோ லரசர்க் குரிய"

என்னுஞ் சூத்திரத்தில் வெளிப்படுத்திய 'படை, கொடி, குடை, முரசு, முடி, குதிரை, ஆனை, தேர், தார்' முதலியவைகள் அரசருக்குரியவையென தெரிவித்துள்ளன. இவைகள் குறுநில மன்னருக்கும் உரியவையெனக் கூறினார்களில்லை. இப்படை முதலியவைகளையன்றி, ஒரு அரசன் ஊராளமுடியுமா? முடியாது. சிவகசிந்தாமணியில் குறுநிலமன்னர்களாகிய வேடர்கள் ஒன்றுசேர்ந்து வந்து நந்தகோன் மாட்டை கவர்ந்தும் போனதாகக் கூறப்பட்டுள்ளது. அக்கூட்டத்தை படையெனத் திருத்தக்கதேவர் கூறினாரில்லையே! புறநானூறில் மூவேந்தரும் ஒன்றுசேர்ந்து படையுடன் பாரியின் மலையைச் சூழ்ந்துகொண்டதாகக் கூறியுள்ளது. பாரியும் படையுடன் அவர்களை எதிர்த்ததாகக் கூறப்பட்டுள்ளதா? இல்லையே! பாரத சண்டையில் எத்தனையோ சிற்றரசர்கள் படையுடன் வந்ததாகக் கூறப்பட்டுள்ளதே! இம்முறையால் குறுநிலமன்னர்கள் சிற்றரசராயிருந்தால் அவர்களுக்கு படையைச் சொல்லாது விடுவாரா? வேடக்கூட்டத்தைக்கூட படையெனச்சொல்ல முடியுமா? அவர்களது கூட்டத்தை கொள்ளைக் கூட்டத்திற்குச் சமத்துவமாகக் கூறப்படுமேயன்றி, படையெனக்கூற முடியாதென வறிவீர். அதனாலேயே குறுநிலமன்னருக்கு படையுரிமை தொல்காப்பியர் கூறினாரில்லை யென வறியலாம்.

முடியும் அவ்விதமே! பாரி என்பவன் பல நாடுகளைக் கைப்பற்றிக்கொண்டு, ஒருவருக்கும் உட்படாமல் தனித்தரசாண்டான். அப்படியாண்ட அவனுக்கும் முடியுண்டா? முடிதரித்திருந்ததாகச் சொல்லப்பட்டுள்ளதா? சிற்றரசர்கள் முடிதரித்திருந்ததாகவும், அவர்கள் பேரரசர்களை வணங்குதலால், அவர்களது முடிகள் பட்டு, பேரரசர்கள் கால்கள் சிவப்பேறியதாகவும் பல சரித்திரக்காரர்கள் கூறியுள்ளார்கள். இதனால் சரித்திரக்காரர்களது அபிப்பிராயம் சிற்றரசர்களுக்கும் முடியுண்டென்பது முடிவு. குறுநிலமன்னர்கள் சிற்றரசதன்மையில் நிற்பாராயின் அவர்களுக்கு முடியேற்படுமே! சங்கநூற்களில் நூற்றுக்கணக்கான குறுநிலமன்னரைக் கூறப்பட்டுள்ளன. அவர்களில் யாருக்காவது ஒருவருக்கு முடியுண்டெனக் கூறப்பட்டுள்ளதா? முடிக்காக ஒரு குறுநிலமன்னன் பட்டப்பாட்டை பெரியபுராணம் நன்குவிளக்கியுள்ளதே! அதனால் குறுநிலமன்னர் பெருநிலமாளினும் முடியும், கொடியும், படையும், குடையும், முரசும் கிடையாதென வறியவும்.

"மன்பெறுமரபு" என்னுஞ் சொற்றொடரை நன்கு யூகிக்கவேண்டும். அரசுபெறு மரபு எது? வேடர்மரபா? வேந்தர் மரபா? எனக்

கேட்டு பாமர ஜனங்களை மருட்டப்பார்க்கிறார். "மன்பெறு மரபு" என்னும் பகுதியை அவர் கூறியவாறு நமது தொல்காப்பியர் குறுநில மன்னரைக் குறிக்க வைத்தாரில்லை. அப்பகுதி அரசரையே குறிக்கும். அதற்கு அடுத்து வரும் "ஏனோர்,, என்பதே குறுநிலமன்னரைக் குறிக்கும். அதை நச்சினார்க்கினியரும் "மன்பெருமரபின் ஏனோரெனப்படுவார் அரசு பெறு மரபில் குறுநில மன்னர் எனக்கொள்க" என விளக்கியுள்ளார். அதாவது அரசுபெறு மரபுவேந்தர் என்றும், அவரைப்போல் ஏனோராகிய குறுநில மன்னரும் அரசுபெறுவர் என்றும் விளங்கினது. "இடையிரு வகையோர்" என்னும் சூத்திரத்தைத் தெரிவித்த க்ஷத்திரியர்கள் வைசியர்களன்றி, ஏனைய பிராமணர் சூத்திரருக்குப் படைவகை கிடையாதென்கின்றார். அச் சூத்திரத்திற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையை முழுதிலும் இவர் வாசித்திருப்பாரேல் வாயெடார். இவர் குலத்தவர் வாழ்ந்த காட்டில் வெள்ளாடு இங்கொன்ற, அங்கொன்ற, மேய்வதைப்போல் மேய்கின்றார். அவர் தெரிவித்த உரையின்கீழ் "நாடினென்பதனான் ஒருசார் அந்தணரும் படைக்குரியரென்பது கொள்க,, எனவும், "வேளாண்மாந்தர்க்கும் இஃதொக்கும்" எனவும் கூறியதின் தன்மையைக் கவனிப்பரேல் அவர்களும் படைக்குரியாரென வறிவர். 'வேந்து விடுதொழிலின்" என்னும் முதலையுடைய சூத்திரத்தையும் பார்ப்பரேல் வேளாளரும் வேடராகிய குறுநில மன்னரைப்போல் படைக்குரியாரென வறிவர்.

"முடிமன்னரால் சிறு ராஜ்யங்களை யாளும்படி நியமிக்கப்பட்டவர் சிலர்" என்கின்றார். உண்மையே! அக்காலத்தில் ஐம்பத்தாறு தேயங்களை யாண்டுவந்ததாகக் கூறுவது சரித்திரப் பிரமாணம். அவர்களிலும் சில சிற்றரசர்கள் உட்பட்டிருந்ததாகத் தெரிகிறது. அச் சிற்றரசர்களில் யாரையாவது குறுநில மன்னர் என்றாவது, அரட்டர் என்றாவது, வேளிர் என்றாவது, குறும்பர் என்றாவது, பள்ளி என்றாவது கூறப்பட்டுள்ளதா? அல்லது சங்க நூற்களிலாவது குறுநில மன்னரும் அரசரும் ஏக குலத்தவர் எனக் கூறப்பட்டுள்ளதா? இவர் அரசராகி சேர்வராயமலையைக் கட்டியாளுதற்கு. குறுநில மன்னர் மலையையன்றி வேறு தேயங்களை யாண்டதாக அவரால் காட்டமுடியுமா? குறுநில மன்னருக்குரிய சாதிப்பெயர்கள் மலையையுங், காட்டையுங் காட்டுவதைப்போல், அவருக்குரிய சாதிப் பெயர்களாகிய பள்ளி என்றாலும் மலையைத்தான் காட்டும். வன்னி என்றாலும் காட்டைத்தான் காட்டும். இரண்டும் ஒன்றுபட்டு அவரை மலைக்குழந்தையாக்குமேயன்றி, மன்னராக்காதென வறிவாராக.

"முடிமன்னரைப் பகைத்துக்கொண்டு தங்கள் வல்லமையால் நிலங்களை வென்று ஆள்பவர் சிலர்" என்கிறார். அதுவும் உண்மையே! குறுநில மன்னரில் பாரி என்பவனே அவ்விதம் பகைத்து ஆண்டவன். அவன் மலையையன்றி, எந்நாட்டை யாண்டான்? அதைச் சொல்ல இவரால் முடியுமா?

"குறுநில மன்னர்கள் அநேகமாய் ராஜகுடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவே யிருந்திருக்கின்றனர்." என்கிறார். இவருக்கே சந்தேகம். அப்படி சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. அவர்கள் வேடர் எனவே யறியலாம்.

"வேதியர்க்கும் வேளாளருக்கு மில்லாத படையுரிமை இவர்களுக்கு இருப்பதால் இவர்களை வேடரென்று சொல்லுவது தவறு,, என்கின்றார்.

"மன்னர் பாங்கிற் பின்னோராகுப" என்னும் அகத்திணை, 30-வது சூத்திரத்தின் கீழ் வேளாளர் பகைவர் மேலும், நாடுகாத்தன் மேலும், சந்துசெய்வித்தன் மேலும் பொருள்வருவாய் மேலும் செல்லுவர் என்றால் பகைவர் மேலும் நாடுகாத்தன் மேலும் படையின்றி எவ்விதம் செல்லுவர்? இதனால் படை வேளாளருக்கும் உண்டென வறிவர். ஒரு குலத்தவருக்கு ஒரு உரிமை இல்லையெனக் கூறி, அதே குலத்தவருக்குப் புறனடையாக உண்டென வுந் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. அத்தகைய பிரயோகங்கள் இரண்டையும் ஒன்று சேர்த்துப் பார்க்கவேண்டும். அப்படியில்லாது தனக்கு அநுகூலமாகிய உரையை மாத்திரம் எடுத்துப் பன்னுவதால் பிரயோஜனமில்லையென வறிவாராக. அக்குறுநில மன்னரின் தன்மையைப் புறநானூரில் நன்கறியலாம்.

பத்திராதிபர்.

ஓர் கட்டுரை.

(அ. கு. ஆதித்தன், காயாமொழி.)

ஆதித்தனைத்தப்புறம் போகிறான். மாலை ஆறு மணியிருக்கும். சந்திரன் மந்தியான போஜன முன்னை உட்கார்ந்தான். தாயாகிய சுந்தரியம்மாள் ஓர் தட்டில் சாதத்தை வைத்துப் பக்கத்தில் நின்றாள்.

சந்:—அம்மா என்ன! வயிற்றிலடிக்க ஆரம்பித்து விட்டாய். நாளுக்கு நாள் சாதம் குறைந்து வருகிறதே.

சுந்:—அப்பா! சட்டியிலிருப்பிற்றானே அகப்பையில் வரும். என்ன பண்ணுவது. நமது கஷ்டக்காலத்தை எங்கு சொல்லி நிவிர்த்திக்கலாம்.

சந்:—என்ன கஷ்டகாலமென்கிறாய். நேற்று இரவுதானே ஐந்து ரூபாய் கொண்டு தந்தேன். அதைக்கொண்டு புதைத்துவைக்கவா.

சுந்:—அப்பா! அதிகம் பேசவேண்டாம். நான் கேட்கும் கேள்விகளுக்குப் பொறுமையுடன் விடை கூறு.

சந்:—சரி அவற்றைத்தான் கேட்டு முடி பார்ப்போம்.

சுந்:—சந்திரா! உனக்கு இந்த ஐந்துரூபாயும் வந்த விதமென்ன.

சந்:—இது நேற்று இரவு 12-மணி வரை விழித்திருந்து நாடகசாலையில்வீரவாகுவேஷங் கட்டி அரிச்சந்திரனை வாங்கியதற்குச் சம்பளம்.

சுந்:—சரி நீ நாடகசாலையிலாடி ஐந்து ரூபாய் சம்பாதித்தேனென்றாய். அங்கு உனக்கு இப்பணமளித்தவர் யார்.

சந்:—கூட்டத்து (Company) முதலாளி கொடுத்தார்.

சுந்:—நன்றாயிருக்கிறது முதலாளியா கொடுத்தார். அவருக்கேது காசு? அவரிடத்து பணம் ஏராளமோ.

சந்:—ஏது பணம்! அங்கு பார்க்கவருகிறவர்கள் கொடுக்கும் பணந்தான். தினந்தோ......

சுந்:—நிறுத்து. பார்க்கவருகிறவர்கள் பணமா? பார்க்கவருகிறவர்கள் யார்? சொல் பார்ப்போம்.

சந்:—ஜமீன்கள், பிரபுக்கள், வியாபாரிகள், சிறுண்டிக்காரர்கள், வண்டிக்காரர்கள், நடன மாதர்கள், பெரும்பாலும் மாணவர்கள்.

சுந்:—அப்பா போதும். நீ கொண்டுவந்த ஐந்துரூபாயையுந் தருகிறேன். அதைச்சாப்பிடு.

சந்:—ரூபாயைச் சாப்பிடுகிறதா? ஏன் அப்படிச் சொல்கிறாயம்மா.

சுந்:—பணங் கொண்டுவந்துவிட்டதாய் பிரமாதமாகப் பேசினையல்லவா? அப்படியானால் பணத்தைச் சாப்பிடு.

சந்:—பணத்தை யார்சாப்பிடுவார். பணத்தைக்கொண்டு அரிசிவாங்கிச் சமைத்துண்ண வேண்டும்.

சுந்தரி:—அப்பா கேள்! சமுசாரி ஒருவன் ஏதோ வியாஜியமாக நியாயஸ்தலந் தேடுகிறான். அவனுக்காகப் பரிந்து பேச வக்கீல் ஒருவருக்குப் பணமளிக்கிறான். அஃதோடு போகிறதா? வக்கீல் குமஸ்தா ஒருவர் இருவர். இருவரும் இப்பணத்தைக்கொண்டு பிழைக்கின்றனர். அப்பணத்தால் அவர் புகைவண்டியேறி வருகிறார். புகைவண்டியிலிருந்து இறங்கவும் ரிக்ஷா ஏறுகிறார். சமுசாரியின் பணம் நான்குதிறத்தாருக்குதவுகிறது. ரிக்ஷாக்காரன் நாடகசாலையிற் கொண்டு கொடுக்கிறான். நீயோ கடைக்காரனிடம் கொண்டு கொடுக்கிறாய். ஆகவே இப்பணமானது கைவிட்டுக்கைமாறிச் சுற்றுகிறதே யொழிய எவராலும் தின்னப்படுகிறதில்லை. மேற்கூறிய கூட்டத்தாரை யெல்லாம், சமுசாரியாகிய ஒருவனே போஷிக்கவேண்டியிருக்கிறது. ஒருவன் எத்தனைபேரைப் போஷிக்கமுடியும். கூடுமானால் ஒருவனைப் போஷிக்கலாம்.

தற்காலஸ்திதியிலோ விவசாயிகள் கிடையாது. விவசாயஞ் செய்தலைக் கேவலமாக நினைத்து ஏர்பிடிக்க முன்வருபவர் ஒருவருமிலர். இதைக் கேவலமென்றெண்ணி, உத்தமத் தொழிலாகக் காப்பிஹோட்டல் ஸ்தாபித்து, எச்சில்

பாத்திரங் கழுவுதல், பற்காட்டிப் பல்வேறு வேடங்கட்டி காட்டியபாடுதல்; ஆர்மோனியப் பெட்டி தூக்கித் திண்ணை திண்ணையாய்ப் போயுட்கார்ந்து பாட ஆரம்பித்தல் முதலிய பிரவிர்த்திகளில் ஜனங்கள் ஆரம்பித்து விட்டனர். மேற் சொன்ன வித்தை தெரியாதவர்களோ சட்டை பூட்ஸ் அணிந்து புகைவண்டிக் கெடிகளில் நின்று ஜனங்கள் பாராமுகமாயிருந்துஞ் சமயத்துச் சாமான்களைக் களவாடிப் பிழைக்கவும், ஒருநாக பெறாத சாமான்களைப் பத்திரிக்கைகளில் மொட்டைத்தலைவனுக்கு முடிசூடும் பெருமையொன்று பெயரிட்டது போல் வர்ணித்து எழுதிப் பணம் பறிக்கவும் ஆரம்பித்தனர்.

இவற்றை யெல்லாங் கவனித்த விவசாயிகள் ஓர் கூட்டங் கூட்டிச் சில தீர்மானங்களை ஸ்தாபித்து அனுஷ்டித்து வருகிறார்கள் அவையாவன (1) தானிய தவசங்கள் விற்பனை செய்தலாகாது. (2) விவசாயிகள் தவிர அந்நிய ராதரவை நாடலாகாது. (3) நியாயஸ்தலங்களைத் தேடிப் போகலாகாது. (4) விவசாயிகளுக்குள் பண்டமாற்றல் மூலமாயுதவி செய்து கொள்ள வேண்டும். (5) சர்க்கார் தீர்வைக்குக் கையிலிருக்கிற பொருளையே கொடுக்கவேண்டும். பொருளில்லாதோர் தங்களது வருமானத்தில் ஓர் பகுதியைக் கட்டவேண்டும். இவ்வாறு இவர்கள் பேசிக் கட்டுப்பட்டிருப்பதினால் நமக்கு நெல், புல் முதலிய யாதொன்றுக்கும் வழியில்லை. பிரபுக்களே பட்டினியிருந்து வருந்துங்காலை, நமது சங்கடத்தைக் கூறுவானேன்.

தெய்வகோபம்போலும், இதேசமயத்தில், ரங்கூன் முதலிய வெளிப் பிரதேசங்களிலும் இடி, பூகம்பம், வெள்ளம் முதலியவற்றின் சேதத்தால், நமக்குப் பொருள் வர வழியில்லை, கடைகளிலோ அரிசி கிடையாது. சமுசாரித் தொழிலை விட்டதன் பலன் இவ்வளவு தூரம் சேர்ந்து விட்டது. விவசாயிகளின் ஒற்றுமை உலகத்தை ஆட்டிவைக்கிறதே. என்னே இவர்களின் மகிமை. பாரிஸ்டரெனப் பதினாயிரம் சம்பாதித்தா லென்ன, வக்கிலென வலவனாயிருப்பினுமென்ன, ஜட்ஜ் என ஜம்பமாயிருப்பினுமென்ன, பணத்தைக் கொண்டு என்ன செய்ய! இனி பிழைக்கிறதற்கு ஒரு வழியிருக்கிறது. இரண்டு ஏரையும் எடுத்து, நாமேயே விவசாயிகளுடன் சேர்ந்து, உறவு பூண்டு, அவர்களாதரவில் வாழ்ந்து, நமது பயிர் விளையுங் காலத்து நாமும் தன்னையே தனக்குதவி என வாழ்வோம்

தொழுதூண் சுவையின் உழுதூணினிது
சீரைத்தேடி னேரைத் தேடு
மேழிச்செல்வம் கோழைபடாது (ஔவை.)
உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை
பழுதுண்டு மற்றோர் பணிக்கு
உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார் மற்றல்லார்
தொழுதுண்டு பின் செல்பவர் (குறள்.)

———(s)———

மதிப்புரை.

திருமூலர் வைத்தியம். 600.

இந்த அற்புத நூல் ஒன்று சித்தர் நூற்பதிப்புக் கழகத்தாரால் அச்சிடப்பட்டு, ஸ்ரீ சண்முகானந்த சுவாமிகள் அவர்களால் எமக்கு நேரில் கொடுக்கப்பட்டது. இந் நூல் திருமூலரால் பாடியதாகத் தெரிகிறது. தமிழ்ப்பாஷையில் வைத்திய நூற்கள் இல்லையெனக் கூறும் தற்கால மேதாவிகளுக்கு இதுவொரு அறிவுறுத்தும் நூலாகும். இந்நூல் செய்யுள்ரூபமாக விருப்பினும் இதை ஆழ்ந்து கவனிப்பின், வைத்தியங்களெல்லாம் இதில் ஒன்றிலேயே அடங்கியிருத்தலை யறியலாம். வேறு வைத்திய நூலைப் பார்க்க வேண்டிய அவசியமிராது. இந்நூல் சென்னை பழையவண்ணாரப்பேட்டை, திருவொற்றியூர் ஹைரோட்டு, யோகானந்த ஆசிரமம். ஸ்ரீ சண்முகானந்த சுவாமிகளிடம். அணா எட்டு. (8)க்கு விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

———(o)———

பத்திராதிபர்.

நமது குலத்தவர்.

(சு. அ. சிவலிங்க நாடார், கொளப்பு.)

பாண்டிய நாட்டுப் புராதன ஆலயங்கள் யாவும் பாண்டிமன்னர்களாலேயே கட்டப்பட்டன. அவர்கள் பிரவேசத்திற்காகவே ஆலயங்களில் தென்பக்க வாசல் நியமிக்கப்பட்டது. காஞ்சியில் சோழமன்னன் சந்திரசேகர பாண்டியனை ஜெயிக்க, அவன் விஜயநகர நாயகமன்னரைச் சகாயங்கொண்டு சோழனை ஜெயித்தான். பின்னர் அந்த நாகம நாயகன் பாண்டியனுக்குப் பூமியைக் கொடாமல் தானே யாண்டு வந்தான். இக்காலத்து நாயக்கமன்னரும் அவனைச் சேர்ந்தவர்களும் நாளுக்கு நாள் முன்னேறிவந்தனர். சிறிது காலத்திற்குப்பின் சந்திரசேகரன் விசயமன்னனிடம் நடந்த வஞ்சகத்தைக்கூற, அம்மன்னன், தனது குலத்தோர் செய்த அடாத காரியத்தை யுத்தேசித்துப் பாண்டியனுக்கு அவன் ராஜ்யத்தை நல்கினான். பின்னர் இருகட்சியினரும் நட்பாளர்களாகவே நடந்து வந்தனர்.

1400-ம் வருடம் சந்திரசேகரன் மரணமடைய, வடுகர்கள் மரபுப்படியும் அரசினைக் கைப்பற்றிப் பெரும்பகையை விளைவித்தனர். நாயக்கமன்னர் பலரிடத்தும் பகுதிப்பணம் வாங்கி வந்தபடியின், வழக்கம்போல் கொற்கையண்டை வாழ்ந்த பஞ்சவழுதி நாடார்களிடமும் தங்கள் ஆதிக்கம் செலுத்த ஆரம்பிக்க, நாடார்களுக்கும் நாயக்கர்கட்கும் ஓர் பெரும் போர் நடந்தது. அநேகர் மாண்டனர். பின்னர் நாயக்கர் நாடார்களுடன் தோல்வியுற்றவர் நாட்டைவிட்டு ஓடிப்போக வேண்டுமென்னும் சபதத்துடன் போர்செய்ய, நாடார்கள் தோல்வியுற்று பரதேசமேகினர். பின்னர் அந்த ராஜ்யத்துள்ள நாடார் ஜனங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கட்குக் கணக்கிலது. "உடைப்பெருஞ்—உலகு" என்ற நாலடியாருக்கு இதுவே தகுந்த உதாரணம். நாடார்கட்குரிய சகல சுதந்தரங்களும் மிக்காலங்கொண்டு நின்றுவிட்டன.

துன்பஞ் சகிக்கொணாது இவர்கள் பலநாட்டிற்கும் ஓடிப் பிழைக்கும் காலத்தே, சேர நாட்டு நாடார்களுக்கும் கன்னடியரால் இவ்விபத்தே நேரிட்டது. இந்த நாயக்கமன்னர்கள் 1400-ம் வருடமுதல் 1737-ம் வருடம் வரையாக 337-வருடகாலமாண்டனர். இக்கொடியர் பின்னர்நீடித்திருப்பின் உலகஞ்சகிக்குமோ? துருக்கமன்னர்கள் தென்தேசத்துள் புகுந்து யாவற்றையுஞ் சூறையாடினர். அதுதொடங்கி மேலும்மேலும் மராட்டியர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் முதலிய பலரும் வந்து தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபிக்க முயற்சித்ததில் ஆங்கில ராஜ்யம் ஸ்திரப்பெறவே யாவர் பலமுங் குறைந்தது. ஆங்கிலரும் நாடார்களை பூர்வத்து க்ஷத்திரியர் என்பதை அறியாது போயினர். வியாசரால் வடமொழியில் வரையப்பட்ட லிங்கபுராணமாவது குலசேகரபாண்டியனால் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றது. அதில் கலியுகத்தியற்கை சொன்ன அத்தியாயம். 1-ம் 2-ம் கவிகளே தக்க சான்றுபகரும். தாழ்ந்து நிற்பவர் வாழ்ந்து நிற்பதும் உலக மாறுபாடே. எது எவ்வாறாயினும் நாடார்கள் 'கெட்டாலு மேன்மக்கள் மேன்மக்களே' என்றபிரகாரம் தங்களது ஆண்மை, திறம், பாத்தி முதலியவைகளுள் சிறப்புற்று விளங்குவதால், பிறஜாதியாரின் பொறாமைக் குள்ளாகிறார்கள். இது விஷயமாயுள்ள ஆதாரங்கட்கு "தமிழ் க்ஷத்திரியகுல விளக்க வினாவிடை பக்கம் 95, 102 வரையும் பார்க்கவும்.

ஆரிய க்ஷத்திரியகுல விளக்கம்.

தபால் சார்ஜ் உள்பட ரூபா 1—8—0.

கொஞ்சங் காப்பிகளே கையிருப்பு.

நாடார் குலாபிமானிகட்கோர் வேண்டுகோள்.

(M. S. முருகையா நாடார், மதுரை.)

"காலத்தாற் செய்த நன்றி
ஞாலத்தின் மாணப் பெரிது" (குறள்.)

குல அபிமானிகளே! நீங்களாதரிக்க வேண்டிய சமயமிதுவே. நாடார்குல மித்திரன் புரட்டாசிமாதம் ஏழாம்தேதி வெளியாகிய பத்திரத்தில் 5-ம் பக்கம் 'வர்மா வமிசத்தவர்' என்ற விபாசத்தை நேயர்கள் கண்ணுற்றிருப்பீர்கள். அவ் விபாசத்தில், ஏதோ அவதூறுபேசி, அக்குலத்தாரை வீணே இழிவுபடுத்தி யிருப்பதாய்ச் சென்னைப் போலீஸ் கோர்ட்டில், தற்போது டிபாரால் பிரியாது தொடுக்கப்பட்டு, 1-ம் 2-ம் பிரதிவாதிகளாகிய கனம் பத்திராதிபர் முத்து நாடார், கனம் சங்கரலிங்க நாடார் இருவருக்கும் சம்மன் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாகச் சுதேச மித்திரனால் தெரியலானேன்.

க்ஷத்திரிய உத்தமர்களே! இது நமக்கோர் சோதனை காலமே. இச்சமயத்து, நாம் யாவரும் ஒன்றுகூடி மேற்படி முயற்சியி லீடுபட்டு; நங்குல முன்னேற்றத்தைக் கருதும் ஒவ்வொரு உண்மை அபிமானியும், மேற்கண்ட கேஸ் செலவு வகைக்குத் தங்களாலியன்ற பொருட்சகாயம் புரியுமாறு வேண்டிக்கொள்ளப் படுகிறார்.

(o)

விடிந்தும் தூக்கமா?

"நாடார் என்னுஞ் சொல் ஆராய்ச்சி" அரங்கேற்றமும், நாடார் நன்கொடை விண்ணப்பமும்.

கனவான்களே! நமது சூரிய சந்திரகுலம் பிரகாசிக்க இம்மகுடம்புனைந்த நூலை சென்னை க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் த. விஜயதுரைசாமி கிராமணி அவர்களால் தமிழ், கிரந்தம், தெலுங்கு, ஆங்கிலபாஷா நூற்களின் ஆதாரவைக் கொண்டு எழுதப்பெற்று பூர்த்தியாகி அன்பர்கள் தம்வைநாடி நிற்கின்றது.

நமது முன்னோர்களுக்கு தலைநகரும் சொக்கலிங்க மூர்த்தியும், மீனாம்பிகையும் வீற்றிருக்கும் மதுரையம்பதியில் பல நகர முக்கிய வித்வான்களையும் தருவித்து அரங்கேற்ற வேண்டுமென்று நம்மவரனேகர்க்கு ஆவல் மிகுந்திருப்பதால் அது வகைக்கு செலவு ரூ 5000 மதிப்பிட்டிருக்கிறது. நமக்கு அத்தொகை பெரிய காரியமல்ல.

இவ் விண்ணப்பத்தைக் கண்ணுறும் சகோதர சகோதரிகள் அவரவர்கள் இயன்றளவு நன்கொடை அளித்து அவரவர்கள் திருப்பெயரையும், கொடுக்கும் நன்கொடையையும், நமது குல மித்திரனில் பிரகாசிக்க முயலும்படி வேண்டுகிறோம்.

எட்டு அணா கோட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன. அபிமானிகள் தங்கள் விலாசத்தைத் தெரிவிப்பின் புத்தகம் அனுப்பப்படும்.

குறிப்பிட்ட தொகை சேர்ந்தவுடன்
அரங்கேற்றப்படும்.

கமிட்டியின் கனவான்கள்.

ப. உ.ரூ. சிதம்பர நாடார், ஹைஸ்கூல் மானேஜர்,
அ. பெரியகருப்ப நாடார்.
சு. பொ. வடிவேல்முருக நாடார்.
ரூ. ஆ. முத்து நாடார், பத்திராதிபர்.
அ. ரா. ம. முருகேச பாண்டியர்.
ப. க. சு. ஆறுமுக நாடார்.

காரியதரிசி. — பொக்கிஷத்தார்.
S. பாண்டியன். — சே. ப. உலகநாத நாடார்.

அருப்புக்கோட்டை.

நாடார் என்னும் சொல் ஆராய்ச்சி, அரங்கேற்ற நிதி.

(சிலோன், நுவறலியா ஸ்ரீமான்களான ஆ. யா. மாணிக்க நாடார், ஆ. ரா. மாசிலாமணி நாடார், ஆ. க. கந்தசாமி நாடார் இம் மூவர் களால் வசூலிக்கப்பட்ட பின்வந்த வசூல் விபரம்.)

	ரூ.அ.பை
சி. ரா. ராஜையா நாடார்	5—0—0
தங்கையா நாடார் மிளகுசேனை	5—0—0
சு. கோசலை நாடார்	2—0—0
மு. ஞானையா நாடார்	2—0—0
தா. இராஜையா நாடார்	2—0—0
சி. செல்லையா நாடார்	2—0—0
எஸ். ஞானமாணிக்க நாடார்	2—0—0
ஞா. ஆசிர்வாத நாடார்	1—0—0
ம. நல்லதம்பி நாடார்	1—0—0
ம. தங்கப்பழம் நாடார்	1—0—0
ஆ. செல்லையா நாடார்	1—0—0
ச. லெட்சுமண நாடார்	1—0—0
சு. பிரமுந்து நாடார்	1—0—0
பி. அய்யக்கண் நாடார்	1—0—0
தோ. கிருஷ்ண நாடார்	1—0—0
ஆ. ஞானசுந்தரம் நாடார்	1—0—0
ச. ஏகா நாடார்	1—0—0
ஞானம் சாமுவேல் நாடார்	1—0—0
கு. இஸ்ரவேல் நாடார்	0—8—0
ம. ஜெபமணி நாடார்	0—8—0
ஆக கூடியது.	32—0—0
ஷை நிதியின் பொக்கிஷதாருக்கு அனுப்பியது.	30—0—0
மணியார்டர் செலவு	0—10—0
மீக்கி இருப்பு	1—6—0
ஆக	32—0—0

இந்த ரூபாய் ஒன்றும், அணா ஆறும் யாம் ஊருக்குப் போகவேண்டியதிருப்பதால் எனது நண்பர் ஆ. ரா. மாசிலாமணி நாடார், ஆ. யா. மாணிக்க நாடார் இருவர் இடத்திலும் வசூல் ஜாபிதாவோடு பாரம் கொடுத்திருக்கிறேன். எமது நண்பர்கள் முயற்சியுடன் வசூலித்தனுப்புவார்களாக. என்று ஸ்ரீமான் ஆ. க. கந்தசாமி நாடார் எழுதுகிறார்.

கேள்விக்கு சமாதானமும், அதற்குமேல் கேள்வியும்.

(முன்றொடர்ச்சி.)

சென்றமாதம் சேலம், மிஸ்டர். S. கிருஷ்ணசாமி ஐயர் கேட்டனுப்பிய இரண்டாவது கேள்வியையும் முடித்தனம். இம்மாதம் அவரது மூன்றாவது கேள்வியும், சேலம் அர்த்தநாரீச நாய்கரின் 16-வது கேள்வியும் ஒருபொருள் கொண்டவை. அவை வருமாறு:—

(ஐயர் கேள்வி) "அநுபவமாய் உங்கள் பரம்பரை மரபார்கள் ஜமீன், பாளையம், சிற்றரசு முதலிய பதவிகள் பெற்றுள்ளார்களா? அப்படியிருந்தால் அவ்வரச வம்சம் இப்போது எங்கிருக்கிறது?"

(நாய்கர் கேள்வி) "நீங்கள் அரசாட்சி செய்ததற்கு அடையாளமாய் உங்கள் பரம்பரையார் யாராவது சிற்றரசர், பாளையகார், ஜமீன்தார், பதவிவகித்துத் தற்போதிருக்கிறார்களா?" என்றனர். இவர்கள் மூல ஓலையைப் பார்க்காது மூளைமோசம் போனவர்கள். அவ் ஓலையைக் காண்பிப்பாம்.

எமது சமாதானம்.

தமிழ் அரசுக்கும், ஆங்கிலேய அரசுக்கும் மத்திய காலத்தில் அதாவது வடுக அரசாட்சியில் ஊர் பந்தோபஸ்துக்காக காவல் காரரை வைக்கப்பட்டு வந்தது. தற்காலம் ஊர்க்காவலாளரை போலீஸாரெனப் படும். வடுகரசர் காலத்தில் பாளையக்காரர் எனப்பட்டு வந்தது. இக் காலத்தில் போலீஸாருக்குச் சம்பளந் தருவதைப்போல்; அக்காலத்தில்பாளையக்காரருக்குசம்பளம் அளிப்பதில்லை. அப்பாளையக்காரர்கள் செய்யும், தொழிலுக்கீடாக, சில ஊர்களை அவர்களுக்கு இறையிலி மாக விடப்பட்டு வந்தது. அவ் இறையிலி ஊர்களை பாளையத்திற்குத் தலைவனாயிருப்பவன் பரிபாலித்து வருவதோடு; அவற்றில் வரும் வரும்படியை, பாளையத்தலைவனும், அவனுக்கு உட்பட்ட காவல்காரர்களும் எடுத்துக் கொள்ளுவர். அதுவே அவர்களுக்குரிய சம்பளம். இப்பாளையத்தில் சேர்ந்து காவல் புரிந்தவர்களை யெல்லாம் பாளையக்காரர் எனப்படும். பாளையக்காரர் என்னும் பெயரால் முத்திரியன் என்னும் ஓர் வடுகு சாதியாரை நாளதும் அழைக்கப்பட்டு வருகிறது.

"The Caste (Mutracha) is known by one of these names in the Telugu Country, and in

the Tamil Country as Muttiriyan or Palaiyakkaran......... .... They are found all over the district in the person of the village taliari or watchman, They proudly Call themselves poligars, and in Chandragiri doralu or lords, because several of the Chittoor palaiyams (Villages governed by Paligars) were in possession of members of their Caste." Vide Thurston's Castes and Tribes of Southern India, Vol. V. P. 127.

"தெலுங்கு தேசத்தில் முத்திராசன் என்றும், தமிழ் தேசத்தில் முத்திரியன் அல்லது பாளையக்காரன் என்றும் அழைக்கப்படும். அவர்கள் பெரும்பாலும் கிராமத் தலையாரி அல்லது காவல் காரராக விருக்கிறார்கள். அவர்கள் தங்களை பாளையக்காரர் எனப் பெருமையாக அழைத்துக் கொள்ளுகிறார்கள். சந்திரகிரியில் தொரலு என்பர். ஏனென்றால் பாளையக்காரரால் ஆளப்படும் சித்தூரிலுள்ள பாளையங்களெல்லாம், அவ்வம்சத்தாரின் ஆளுகையிலேயே அடங்கி யிருக்கின்றது.' எனக் கூறியதால் இக்காலத்தில் முத்திரியன் காவல் காரராக விருப்பதைப்போல, வடுகரசர் காலத்திலும் அவ்வம்சத்து முன்னோர்கள் காவல்காரரா யிருந்தமையின் பாளையக்காரர் என்னும் பெயரைப் பெற்றனர்.

"The Boyas are a Telugu hunting Caste, chiefly found above the ghats. Many of the Poligars of that part of the Country used to belong to the Caste." Thuston's Castes, Vol. I. P. 185

"Harpanahalli was the seat of one of the most Powerful Poligars in the district in the eighteenth Century. The founder of the family was a Boya taliari." Thurston's Castes. Vol. I. P. 183.

"18-ம் நூற்றாண்டில் பல்லாரிஜில்லாவில் விசேஷ வலுவுள்ள பாளையக்காரர்களில் ஒருவருக்கு அர்ப்பனஹள்ளி என்னும் ஊர் இடமாயிருந்தது. அப்பாளையக்கார குடும்பத்தை ஸ்தாபித்தவன் தலையாரி தொழிலிருந்த போயி வம்சத்தவனாகும். போயிகள் தெலுங்கு தேசத்து வேடர்களாவர். அவர்கள் முக்கியமாக மலைச் சரிவுகளில் காணப்படுவர். அப்பக்கத்தில் அநேக பாளையக்காரர்கள் அவர்கள் வம்சத்தவர்களாக விருக்கிறார்கள்." என கூறியிருக்கின்றார். இவற்றால் ஊர்க் காவல்காரர்களையே வடுகரசர் காலத்தில் பாளையக்காரர் என வழைக்கப்படுவர் என வறியலாம். இனி இத் தமிழ்நாட்டுப் பாளையக்காரர்களை கவனிப்பாம்.

"Mr Wallace when collector of the district, He remarks that, previous to our acquisition of the district, the police of the Country appeared to have been visited in a body of people distinguished officially by the name of kavalgars or watchers. "The kavalgars" he writes, are a bold, hardy, predatory race, living generally in jungles and fastnesses. They are composed of Various tribes, such as Udaiyan, Tevan, Padaiyachi, Kavundan, Nayinar, &c.' The Trichinopoly District Manual, Ch. XVIII. pe. 285.

"மிஸ்டர் உவாலேஸ் ஜில்லாவுக்குக் கலெக்டராக இருந்தபோது பின்வருமாறு குறிப்பிடுகிறார். நாமிந்த ஜில்லாவைப் பெறுமுன்னமே, தேச ரக்ஷாவலானது வாச்சர் அல்லது காவல்காரரென்றும் உத்தியோக முறையால் நடத்தப்பட்டதாய்த் தோன்றுகிறது. காவல்காரர் தைரியமும் திடமும் கொள்ளையடிக்கிற வம்சத்தாராயும், காடுகளிலும் துருக்கங்களிலும் வசிப்பவராயுமிருந்தார்கள். அவர்கள் உடையான், தேவன், படையாட்சி, கவுண்டன், நயினார் எனப்பல குடும்பத்தில் சேர்ந்தவராயிருந்தனர்." எனவுங் கூறியுள்ளார்.

இப்பகுதியில் ஊர்க்காவல்காரர் அல்லது பாளையக்காரரது தன்மையையும் அவரவரது சாதியையும் நன்கு விளக்கப்பட்டுள்ளது. அந்தக் காவல்காரர்களிருந்த தைரியமும், திடமும் முன்னவர்களாயிருந்ததோடு, கொள்ளையடிக்கும் குடும்பஸ்தராகவு மிருந்தார்களாம். (பாம்பிற்கு பாம்பின் கால் தெரிவதைப்போல், கொள்ளைக் குடும்பஸ்தருக்குத்தான், கொள்ளையடிப்பவரை கண்டுபிடிக்க முடியும்.) அதோடு காடுகளிலும் மலைகளிலும் வசிப்பவர்களாகவு மிருந்தார்களாம். இத் தொழிப்பு வேட்டையைப்போன்ற சாதியாருக்குத்தான் ஏற்படக்கூடியது. மற்றசாதியார்களுக்கு கொள்ளையையே தங்களது குலத்தொழிலாகவும், காட்டையும் மலையையுமே தங்களது வீடாகவுங் கொள்ள முடியாது. அவை அவர்களுக்கு தொழிலுமல்ல, இடமுமல்ல. அப்படியாயின் அத்தொழிலை புரிபவர் யார்' எனின், "உடையான், தேவன், படையாட்சி, கவுண்டன், நயினார்" என்பவர்களாம். ஆகிய இவர்களோடு, மேலே கூறிய முத்திரியரையும், போயிகளையும் ஒன்று சேர்த்துப் பார்க்கவும். இச் சாதியார்களெல்லாம் அக்காலத்தில் ஊர்க்காவல்காரராக விருந்து பாளையப்பட்டானார்கள். இப்பாளையக்காரர் அல்லது காவல்காரரை ஐந்துவகுப்பாக பிரிக்கப்படும். அரசுகாவல்காரர், காவல்காரர், குடிகாவல்காரர், விசாரிப்புகாவல்காரர், தலையாரி எனவாம்.

1. The Arasukavalgar signifies a prince or chief who holds a kaval. Tondiman (of Pudukottai) and the Poligars of Ariyalur and Udaiyarpalayam are distinguished by the appellation of Arasukavalgar.

"அரசுகாவல்கார் என்றால் காவல் செய்யும் ஓர் அதிபதி அல்லது தலைவன் எனப் பொருள்கொள்ளும். புதுக்கோட்டைத் தொண்டமானும், அரியலூர், உடையார்பாளையம் பாளையக்காரர்களும் அரசுகாவல்கார் என்கிற பட்டப்பெயரால் விளங்குவர்.

2. Menkavalgar signifies the head or chief kavalgar of a district. Individuals holding the kaval of one or more Villages are termed Menkavalgars. The Arasukavalgar have Men kavalgrs under them in charge of particular districts.

மென்காவல்கார் அல்லது காவல்கார மனிதர் என்றால் ஒரு ஜில்லாவுக்கு முக்கிய காவல்கார் எனப் பொருள்கொள்ளும். ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களின் காவலைக்கொண்டிருக்கிற ஒவ்வொரு தனி மனிதனும், காவல்கார மனிதன் என்று அழைக்கப்படுவான். சிலவிசேஷஜில்லாக்களின்பொறுப்பாக, அரசு காவல்காரர் தங்களுக்குக்கீழ் காவல்கார மனிதரை உடைத்தாயிருக்கின்றனர்.

3. The term Kudikavalgars is applied to the ryots of a village or district when they are kavalgars either in their own village or in other villages or districts. Their responsibility and duties are similar to that of Menkavalgars and Arasukavalgars.

குடிகாவல்கார் என்னும்பெயர்கிராமத்தில் அல்லது ஜில்லாவிலுள்ள குடியானவர்களுக்கு வழங்கும். அவர்கள் அவர்களது கிராமத்திலாவது அல்லது மற்ற கிராமங்களிலாவது, ஜில்லாக்களிலாவது, காவல் புரிவர். அவர்களுடைய கடமையும் பொறுப்பும், அரசு காவல்கார், காவல்கார மனிதர் இவர்களுடைய தற்றொத்தது.

4. Visarippukaran is the person placed by the Men or Kudikavalgar incharge of particular villages or districts. They are the Temporary servants of the Menkavalgar.

விசாரிப்புக்காரன் என்பவன் காவல்கார மனிதர் அல்லது குடிகாவல்காரரால் சில விசேஷித்த கிராமங்களுக்கு அல்லது ஜில்லாக்களுக்கு பொறுப்பாய் நியமிக்கப்பட்ட மனிதனுவன். அவர்கள் காவல்கார மனிதருக்கு வேண்டும் சமயத்திற்குரிய வேலைக்காரருமாவார்கள்.

5. Kulapandu or Taliari is the village watch man under the Arasu, Men, or Kudikavalgar. In some instances they are independent, and then they are the only police officers of the Village. Vide, The Trichinopoly District Manual, Ch. XVIII. P. 286.

குலபந்து அல்லது தலையாரி என்பவன் அரசு காவல்கார், காவல்கார மனிதர் குடிக்காவல்கார் முதலியவர்கள் கீழுள்ள கிராமக் காவல்காரன். சில விஷயங்களில் அவர்கள் அன்னியர் சார்பற்றவராயும், கிராமத்திற்குத் தனித்த ஊர்க்காவல்கார (போலீஸ்) உத்தியோகஸ்தர்களாகவும் இருக்கின்றார்கள்." எனக் கூறப்பட்டுள்ளது.

The arasu and menkavalgars as well as the Kudikavalgars are responsible for all thefts Committed after sunset and before sunrise in the villages of their respective jurisdictions; if they do not produce the thieves they are responsible for the amount stolen, but, if they can trace the thieves into the limits of another kavalgor, it is understood that on sufficient proof thereof, the latter becomes responsible for the amount stolen or for the production of the thieves. This duty and respousibility is demanded as well in towns and in villages, and it extends to all property belonging to resident inhabitants, as well to that which is kept in houses and also tocattle and standing and reaped crops. The performance of these duties is enforced not by written regulations but by the continuation of the usages of late years." Vide, The Trichjnopoly District Manual, Ch. XVIII, P, 287.

"இவர்கள் அரசுகாவல்கார், காவல்கார மனிதர், குடிகாவல்கார் இவர்களைப் போலவே தங்களது ஆக்கத்தப்பட்ட இடங்களில் குரிய அஸ்தமனத்திற்குப்பின்னும், உதயத்திற்கு முன்னும் உள்ள சகல களவுகட்கும் பொறுப்பாளியாக விருந்தார்கள். அவர்கள் திருடர்களைக் காண்பிக்காத விஷயத்தில் அவர்களே களவுபோன தொகைக்குப் பொறுப்பாளியாவர். அவர்கள் திருடர்கள் அடுத்த காவல்காரர் எல்லையில் உள்ளதாய்த் தப்புவிப்பின், போதுமான உதாரணங்களுடன் அது உணரப்படின், அடுத்த காவல்காரர் களவுபோன தொகைக்கு அல்லது களவுபோன மாடுகளுக்குப் பொறுப்பாகிறார். இந்தக்கடமையும், பொறுப்பும் கிராமங்களிலும், பட்டணங்களிலும் அதிகாரத்

துடன் கேட்கப்படுகிறது. அது அச்சியதேச வாசி களின் சகல பொருட்களுக்கும், வீட்டிலுள்ள சகல வஸ்திரங்களுக்கும், கால்நடைகளுக்கும், சில சிற்சைப் பொரு ளுக்கும், அறுவடைத் தானியங்களுக்கும் உரித்தா யிருக்கிறது. இக்கட்டளையை நடத்துதல் எழுதப்பட்ட சட்டங்களால் வற்புறுத்தப்படுகிறதல்ல, கடந்த வருடங்களில் நடந்துவரும் வழக்கங்களை அநுசரித்தே பழகிவருகிறார்கள்" என்பதாம். இக்காவல்காரர் அல்லது பாளையக்காரர்களை அங்கிலேயர் ஜமீன்தார் ஆக் கினர்

"The Zemindars of Turaiyur are Reddis, and of Telugu extraction. The Zemindars of Ariyalur and Udaiyarpalayam, however, are Kallars by Caste. and till they received their present sanads, held their estates as arasuka valgars. An account of their Kaval duties will be found in Chapter XVIII under the head of Police. As has been there shown, the poligars were relieved from the performance of all police duties from the time that their present estates were handed over to them on Zemindari tenure." The Trichinopoly District Manual, Ch. XIV, P. 260.

"துறையூர் ஜமீன்தார், ரெட்டிகள். தெலுங்கு வம்ஸம். அரியலூர், உடையார்பாளையம் ஜமீன்தார்கள் கள்ளர் மரபைச் சார்ந்தவர்கள். அவர்கள் தற்காலம் பெற் றுள்ள சன்னது பெறுவதற்குமுன், அவர்களது எஸ் டேட்டு அரசுகாவல்கார் முறையில் வைக்கப்பட் டிருந்தது. அவர்களது காவல் கடமைகளின் விபரம், 18-வது அத்தியாயத்தில் போலீஸ் என்னும் தலைப் பின் கீழ் காணப்படும். அங்கே காண்பிக்கப்பட்ட பிரகாரம் பாளையக்காரர்களை போலீஸ் வேலையிலிருந்து (அங்கிலேயரால்) விடுவிக்கப்பட்டு, அக்காலத்தி லிருந்து அவர்களது தற்கால எஸ்டேட்டை ஜமீன் முறையில் ஒப்புவிக்கப்பட்டது" எனவும்,

"Zemindar of Kadavur, and Zemindar of Marungapuri, ... both these Zemindars are of Telugu extraction, and of the Tottiya Nayak Caste." The Trichinopoly District Manual, Ch. XIV. P. 262,

"கடவூர் ஜமீன்தார் மருங்கபுரி ஜமீன்தார் ஆகிய இந்த இரண்டு ஜமீன்தார்களும் தெலுங்கர்களாவர். தொட்டிய நாய்க்க வம்ஸத்தைச் சார்ந்தவர்கள்." எனப்படுவர்.

இனி இப்பாளையக்காரர் ஏற்பட்டகாலத்தை யும், யாரால் ஏற்படுத்தப்பட்டனர் என்பதையும் இங்கு அறிவிப்பாம்.

மதுரையை ஆண்ட வடுகு அரசரில் எட்டா வது பட்டத்தவராகிய ஸ்ரீ திருமலைநாயக்கர் என்னும் ஸ்ரீ திருமலை சவுரிநாயினி அய்யலு காரு அவர்கள் A. D 1623-ம் வருடத்தில் மதுரை மீனாட்சியம்மன் சந்நிதியில் மகுடாபி ஷேகஞ் செய்துகொண்டார். அவர்காலத்தில் (A. D. 1623-1659) அவர் அரசாண்ட மது ரை, திருச்சிறைப்பள்ளி இராஜ்யத்தி லடங்கிய எழுபத்திரண்டு (72) கொத்தளங்களையும் கா வல் செய்ய எழுபத்திரண்டு பாளையப்பட்டை நியமனஞ் செய்தார். அவை வருமாறு:—

(1) இராமநாதபுரம் சேதுபதி
(2) சிவகெங்கை உடையத்தேவர்
(3) புதுக்கோட்டை தொண்டமானுர்
(4) அரியலூர் நயனர்
(5) துறையூர் ரெட்டியார்
(6) இலுப்பூர் காமாட்சி நாய்க்கர்
(7) குளத்தூர் இராமசாமித்தொண்டமானுர்
(8) காத்தலூர் பெறும்பூர் தீத்தக்குட்டி தேவர்.
(9) மருங்காபுரி பூச்சிநாய்க்கர்
(10) நத்தம் லிங்கம் நாய்க்கர்
(11) லக்கைய நாய்க்கர்
(12) வீரனுர் காமி நாய்க்கர்
(13) தோகைமலை விசுவப்ப நாய்க்கர்
(14) பிள்ளைமழுங்கி மூர்த்தி நாய்க்கர்
(15) ராமகிரி சமி நாய்க்கர்
(16) வீரமலைப்பாளையம் காமய நாய்க்கர்
(17) பள்ளி தென்னம நாய்க்கர்
(18) விருப்பாட்சி, கன்னிவாடி, ஆயக்குடி பாம்பாறை-நாய்க்கர்
(19) இடையகோட்டை; ஆயலூர், வல்லக் கொண்டம நாய்க்கர்
20. மதிலூர் நாய்க்கர்
21. கொல்லராயன்கோட்டை வாலமூர்த்தி நாய்க்கர்
22. மருஙூத்து அம்மைய நாய்க்கர்
(23) எமுக்காளபுரம் கூளப்பநாய்க்கர்
24. தேவாரிமடை கோப்பிய நாய்க்கர்
25. தொட்டியன்கோட்டை திருமலை கந்த நாய்க்கர்

26. திருமலை போடிநாய்க்கர்
27. பூசாரி நாய்க்கர்
28. பெரியகுளம் ராமபத்திர நாய்க்கர்
29. அப்பாச்சி கவண்டர்
30. குருவிகுளம், பெரிய வீரப்ப நாய்க்கர்
31. இரச்சக்க நாய்க்கர்
32. மதுரையிலுள்ளபாளையப்பட்டுவோக்கமநாய்க்கர்
33. உத்நப்ப நாய்க்கர்
34. தொட்டப்ப நாய்க்கர்
35. கவண்டன்கோட்டை வெள்ளைகண்டம் சிறுபாலைக் சச்சைக்கட்டி காமய நாய்க்கர்
36. சிறுவலை மாதவ நாய்க்கர்
37. திருநெல்வேலி பாளையப்பட்டு ஏளாயிரம் பண்ணை வன்னியனார்
38. எட்டியாபுரம் எட்டியப்ப நாய்க்கர்
39. பாஞ்சாலங்குரிச்சிட்டபொம்ம நாய்க்கர்
40. சிவகிரி வரகுணராம வன்னியனார்
41. சேத்தூர் திருவண்ணத்தேவர்
42. கொல்லராயடி கலங்கா நாய்க்கர்
43. நாகலாபுரம் இரவப்ப நாய்க்கர்
44. ஊத்துமலை மருதப்ப தேவர்
45. குருக்குவெட்டி அளாதத்தேவர்
46. மணியாட்சி சொக்கன்பட்டி
47. சுரண்டை நடுவக்குறிச்சி
48. தலைவன் கோட்டை
49. கொல்லம்பட்டி
50. கொல்லங் கொண்டான்
51. சிங்கம் பட்டி
52. கொக்கட்டான் செவல்
53. ஊர்க்காடு
54. கடம்பூர்
55. காடல் குடி
56. விரசிலம்பட்டி
57. களத்தூர்
58. மேமாந்தை
59. மாவிலோடை
60. ஆலங்குளம்
61. சென்னிலைக்குடி
62. பாவாலி மூவரையன்
63. தம்பிச்சி நாய்க்கர்
64. சாமி நாய்க்கர்
65. எரமடை கூளப்ப நாய்க்கர்
66. மன்னூர்கோட்டை
67. ஆதத்தன்சலா பெத்தனி நாய்க்கர்
68. அளகாபுரி ரெட்டைக் குடைவன்னியர்
69. கோயம்புத்தூர் தளியெத்து நாய்க்கர்
70. சேலம் தலமலை ராமசந்திர நாய்க்கர்
71. தாரமங்கலம் கெட்டி முதலியார்
72. யெளம்பரம்மாரவல்லாவணப்ப நாய்க்கர்

இப்பாளையப்பட்டில் விளங்கும் நாய்க்கர் பட்டமுடையவர்களெல்லாம் ஸ்ரீ திருமலை நாய்க்கர் வம்ஸத்தவராவர்.

ஆகிய இவர்களன்றி இன்னும் நடுவாயல் அளகிரி நாயக்கர், கரிப்பட்டு பொம்மிய நாய்க்கர் என்னும் இருவர்களையும் அதிகமாகக் கூறப்பட்டுள்ளது. (Vide Oriental Historical Manus cripts Vol. II. P. 161 to 167) இவர்கள் மேற்கூறிய ஊர்களில் எதாவதொவ்வொன்றை சார்ந்தவர்களா யிருக்கலாம். இந்த எழுபத்திரண்டு பாளையப்பட்டார்களும்;

1. திண்டுக்கல் கோட்டை
2. தாராபுரம் கோட்டை
3. கோயம்புத்தூர் கோட்டை
4. தளையநாய்க்கன் கோட்டை
5. சத்தியமங்கலங் கோட்டை
6. அத்தியூர் கோட்டை
7. ஈரோடு கோட்டை
8. காங்கையன் கோட்டை
9. விசையநகரம் கோட்டை
10. கருவூர் கோட்டை
11. நாமக்கல் கோட்டை
12. சேந்தமங்கலங் கோட்டை
13. பெரியசேலம் கோட்டை
14. மேலூர் கோட்டை
15. சாமபள்ளிக் கோட்டை
16. காவேரிபூங் கோட்டை
17. ஆத்தூர்க் கோட்டை
18. ஆனந்தகிரிக் கோட்டை
19. மாமத்திக் கோட்டை
20. அரவக்குறிச்சிக் கோட்டை
21. முகலூர் கோட்டை
22. சக்கிரி கோட்டை
23. செசமகிரி கோட்டை

ஆகிய கோட்டைகளையும், மேற்கூறிய ஊர்களையும் 1630-ம் வருடம் அதாவது இற்றைக்கு 290 வருடத்திற்கு முன் காவல்காரராக ஏற்படுத்தப்பட்டு காவல்புரிந்து பாளையக்காரரானார்கள், அங்கிலேயர் ஆளுகை ஆரம்பத்தில் ஜமீன்தாராக்கப்பட்டார்கள், இப்பொழுது அவர்களை சேலம் ஸ்ரீமான் S. கிருஷ்ணசாமி ஐயர் அவர்களும், சேலம், மிஸ்டர். அர்த்தநாரீச நாய்கர் அவர்களும், தமிழ் அரசர்களாகிய சேர சோழ பாண்டிய வம்சத்தில் சேர்க்கத் துணிந்தனர்.

அப்படி சேர்க்கத் துணிந்த இவர்கள் சேதுபதிமுதல் தாராமங்கலம் கெட்டி முதலியார் ஈறாகவுள்ள 72 பாளையத்தார்களில், பாண்டிய குலத்தவர் யாரார்? சோழ குலத்தவர் யாரார்? சேர குலத்தவர் யாரார்? இவர்களை வகுத்து தெரிவிப்பார்களாக.

இவ்விதம் பாளையப்பட்டுகளை வைத்து எங்கள் சாதியை யொதுக்கித் தாத்திய திருமலை நாய்க்கர் எங்கள் சாதியாரையும் பாளையப்பட்டாராக நியமித்தாரில்லை. அப்படி நியமிக்காமையால் எங்கள் சாதியில் பாளையப்பட்டு மில்லை. அப்பாளையப்பட்டு மாறிய ஜமீன்தாருமில்லை எனவறிவர்.

ஆனால் எங்கள் சாதியில் தொன்றுதொட்டுள்ள நிலவுரிமைக்காரரும், இவ்விதம் நியமிக்கப்படாது தொன்றுதொட்டுள்ள நட்டாத்தி ஜமீனுமுண்டு. அந்த பூஸ்திதியின் தன்மையை யறிவிப்பாம்.

(இன்னும் வரும்.)

———(S)———

முக்கியக் குறிப்பு.

இந்தியாவிலுள்ள சமயம்:—இந்து சமயம் இந்தியாவின் பூர்வ சமயம். இந்துக்களால் அனுஷ்டிக்கப்பட்டது. புத்தசமயம் பவுத்தரால் ஏற்படுத்தப் பட்டது. வட இந்தியாவிலும், சிலோனிலும், பர்மாவிலும் உள்ளது. ஜயினிய சமயம புத்தசமயத்தைப் போன்று வட இந்தியாவிலுள்ளது. இது இந்துசமயமும் புத்தசமயமும் கலந்துண்டானது. மகமது சமயம் மகமதுவால் ஏற்படுத்தப்பட்டது. அரேபியாவிலிருந்து வந்தது. சிக்கிய சமயம் மகமது சமயமும் இந்துசமயமும் கலந்துண்டானது. சட்லஞ் நதியின் கரையில் வசித்த நானக் என்பவரின் கொள்கையை யனுஷ்டித்தது. பார்சிமதம் அக்கினியைக் கும்பிடுதலாகும். பெர்சியாவிலிருந்து வந்தது. கிறிஸ்து சமயம் அரேபியா பாலஸ்டையனிலிருந்து வந்தது. கிறிஸ்துவால் ஏற்படுத்தப் பட்டது. இதுவே இந்தியாவிலுள்ள முக்கிய சமயங்கள்.

இந்தியாவிலுள்ள பாஷைகள்:— சமஸ்கிருதம், பெங்காலி, உரியா, மராத்தி, குசராத்தி, பஞ்சாபி, இந்தி, உருது, அசமி, நீபாலி, காஷ்மிரி, காச்சி, சிந்தி, புஸ்த்து, தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், சிங்களம், இங்கிலீஷ். இவைகளே முக்கிய பாஷைகள்.

கசினி:—இவ்வூர் மகமது காசினி என்பவரின் பெயரால் ஏற்படுத்தப்பட்டு, கோட்டையுள்ள ஓர் பட்டணம். ஆப்கனி ஸ்தானத்திலோர்பாகம். மகம்மது காசினியின் சமாதியும் அங்குள்ளது காபூலுக்கு என்பத்தைந்து மைல் தூரத்திலுள்ளது.

மெக்கா:—இது அரேபியிலுள்ள ஓர் முக்கிய பட்டணம். இதுவே மகமது சமயத்தை ஸ்தாபித்த மகமதுக்குப் பிறப்பிடம். காபா என்பது மெக்கா மசூதியில் மத்தியிலுள்ளது. அது கிப்பா என்றழைக்கப்படும். ஒரு கறுப்புக் கல்லை உடைத்தாயிருக்கிறது. அக்கல்லை பூர்வத்திலிருந்து அரேபியரால் பரிசுத்தமாக எண்ணப்பட்டு வருகிறது.

மெடினா என்பதும் அரேபியாவிலுள்ள ஓர் முக்கிய பட்டணம். மெக்காவின் வட பக்கத்திலுள்ளது மகமது சமாதியும் அங்குள்ளது.

வங்காள பகல்பூர் ஜில்லாவிலுள்ள செங்குண்டம் என்னும் ஊத்தில் மகா பாரதத்தில் கூறப்பட்ட பாஞ்சசன்னியம் என்னும் சங்கு கிடைக்கிறதாம். அச்சங்கு மூன்றடி நிகளமும், ஒன்னரையடி அகலமும் உள்ளதாம்.

சிதைகுண்டம் என்பது மேற்படி பகல்பூரிலுள்ள ஒரு குளம். அது நூறு அடி நிகளமும்,

ஐம்பது அடி அகலமுமுள்ளது. சீதை புருஷனோடு வனவாசஞ் சென்றபோது, அதற்கடுத்த மலையில் வசித்து அக் குளத்தில் ஸ்நானஞ் செய்ததாகச் சொல்லப்படுகிறது. அதனால் அப் பெயரைப் பெற்றது. அநேக யாத்திரிகர் அவ் குதந்தி அதில் ஸ்நானஞ் செய்கிறார்கள். அதை யடுத்த மலையும் சீதைகுண்டம் மலை என அப் பெயரையே பெற்றுள்ளது.

வங்காளம், சுட்ட நாகப்பூரிலுள்ள கெங்கபூர் எஸ்டேட்டில் தென்கோயல், சங்கா என்னும்: இரு நதிகளும் ஒன்றுசேர்ந்து, பிராமணி என்னும் பெயரைப் பெற்று ஓடுமிடந்தான் பாராசரும், மச்சகந்தியும் காந்தர்வ விவாகம் செய்து கொண்ட இடமாம். வேதவியாசர் பிறந்த இடமும் அதுவேயாம்.

மேற்படி சுட்ட நாகப்பூரில் சர்க்கெஞ்சா எஸ்டேட்டிலுள்ள ராமகிரி மலைக்கு வடபாகத்திலுள்ள ஆக்போர் என்னும் கிழ்பாதையில் ஒரு குகையுண்டு. அக்குகை, 44-அடி நீளமும், 10-அடி அகலமும், 6-அடி உயரமும் உள்ளதாம். அதில் ராமர் வனவாசம் சென்றபோது அங்கு தங்கியதாகவும், அங்கிருந்தே இராவணன் சீதையை கொண்டுபோனதாகவுஞ் சொல்லப்படுகிறது.

——(o)——

ஓர் நன்மதி.

(சு. இராஜகுமாரன், அடையல்.)

மனிதனுடைய அற்புதமான ஜீவிய கால ஓட்டம் ஈஸ்வரனது கரத்திலிருக்கிறது.

அவர் தமக்குச் சித்தமானபடியெல்லாம் நடத்துகிறார். மேலான நிலைமைக்கு உயர்த்துகிறார். இவ்வுபர்வைக்கண்டு சிலர் பொருமை கொண்டு பற்பல யிடையூறுகள் அவனுக் கிழைக்கினும் அவைகள் அவனை ஒன்றும், செய்யமாட்டா?

மனிதர்களை நல்லவர்களென்றேலும் கெட்டவர்களென்றேலும் சொல்லுவதற் கில்லை. ஓர் விஷயத்தில் நல்லவர் இன்னுமோர் விஷத்தில் கெட்டவர். இவ்விதமாகவே உலகம் பல விதமிருக்கிறது. எனவே, ஒவ்வொருவரிடத்திலுமுள்ள நற்குணங்களைப் பற்றிக்கொள்ள வேண்டுமேயன்றி அன்னோர் தம் தீய குணத்தைக் கூறிக் கூறிச் சிரித்துக்கொண் டிருப்பது புத்திசாலித் தனமல்ல.

நல்லகாலத்திற் கெல்லாம் ஜெயம். கெட்ட காலத்திற் கெல்லாம் அபஜெயம் என்றாலும், அதிகமான விருப்பு வெறுப்புமின்றி எவன் தான் கருதிய கருமத்தில் வெற்றியடைவோமென்ற நம்பிக்கையுடன் முயற்சிக்கிறானோ அவனே ஜெயமுடையவனாகும்.

உத்தமமான முயற்சியுடையானுக்குப் பல விதமான சங்கடங்கள் துக்கங்கள் வந்து சம்பவித்திடினும், தன் மனதைக் கலங்கவிடாமல் உறுதியான மனவலிவோடும் நம்பிக்கையோடும் இருக்கின் இவைகளெல்லாம் உலகில் சாதாரணமாய் நடப்பவைகளே அனுபவிக்க வேண்டியவைகளே என்று எவன் நினைக்கிறானோ பொறுமையோடு சகிக்கிறானோ அவனே தான் கோரிய காரியங்களில் வெற்றி பெறும், தீரமான புருஷனும் மனிதனுமாவான்.

அதிக ஆசையால் பொருளைத் தேடவேண்டுமென்று அங்கலாய்த்து அல்லோலப் படுவோனுக்கு பல இடையூறுகள் வந்து சம்பவிக்கின்றன. எனவே தங்கமலையே புரண்டுவருவதாயினும் அதற்கும் ஆத்திரங் கொள்ளாமல் அமைதலோடு முயற்சிப்பவனுக்கே பொருள் சேரும்.

எத்தனைச் செல்வம் படைத்தோனாயினும் பிறர் விஷயங்களில் நுழைந்து அவர் தமக் கின்னா செய்திடில் அன்னோன் பொருள் அழிவது திண்ணம். எனவே பொருளைக் காக்க விரும்புவோன் பிறர் தமக்குத் துன்பம் செய்யாமலும், கண்ட கண்ட விடமெல்லாம் போகாமலும், பிறர் தனக்குச் செய்யும் துன்பங்களைச் சகித்தலுமே பொருளைக் காப்பாற்றும் வழியாகும்.

உத்தமமான எந்த விஷயங்களும் வெற்றி படைவோம் என்ற நம்பிக்கையுடன் முழுமன

தோடுங் கூடி கிரியை செய்யவேண்டும். ஒவ்வோர் விஷயங்களிலும் பக்தியுக்குரிய எண்ணம் பாவி அவ் விஷயங்களினூடே பரிபாலித்திடுதல் வேண்டும். அப்பொழுதுதான் அது பூத்துக் காய்த்துக் கனிந்திடும். அதின் சுவையுமினித்திடும். எவ்வளவு பதார்த்தங்களை சமைத்தாலும் உப்பு யின்றி உண்ணக் கூடாமை போல் எத்தனை காரியங்களை வெற்றியுடன் முடித்தாலும், பக்தி யில்லையேல் பயனில்லை.

கதி தவறாமை.

க. சு. பொன்னையா நாடார், ருவான்வில், சிலோன்

புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது; சுடினும் செம்பொன் தன் ஒளி கெடாது, என்னும் நீதி வாக்கியங்களுக் கொப்பத் தனக்கு வறுமையுள்ள காலத்தும் பெரியோர்கள் உபகாரஞ் செய்தலைக் கைவிடார்கள் என்றுரைக்கும் நீதிமான்களில் நித்திய வசனத்திற்கொரு உதாரண முண்டு.

ஒரு வர்த்தகன் தன் நாட்டிலிருந்து அடுத்த நாட்டிற்குப் போவதற்கு காட்டுவழியை உபயோகித்து வந்தான். அக் காட்டில் கள்வர் ஒளிந்திருந்து போகிறவர்களிட மிருக்கும் பொருள்களைப் பறிப்பது வழக்கம். ஒருசமயம் அவ் வியாபாரி அவ் வழியாக ஏராளமான திரவியங்களைக் கொண்டுபோகிற தருணத்தில் கள்வர் இருவர் அவனைத் துரத்திக்கொண்டோடி வந்தார்கள். மடியிலிருக்கும் பொருளால் மனதில் பயங்கொண்ட அவ் வர்த்தகன் இவர்களைக் கண்டு தான் போகும் பாதையை விட்டு வேறு பாதையாகத் தப்பித்துக்கொள்ளும் பொருட்டு ஓடி ஒரு குகையில் ஒளிந்து கொண்டான். அக் குகையில் வசிக்கும் ஒரு தபசி அதற்கருகில் காய்கனிகளைப் பறித்துக் கொண்டே அவன் போய் ஒளிந்திருந்ததைப் பார்த்திருந்தார். சற்று நேரத்திற்கெல்லாம் இவ்விரு கள்வரும் வந்து இங்கு ஒரு புருஷனை வரக்கண்டீரோ? எனத் தபசி ஒருதிக்கைக் காட்டி, அவன் இத் திக்கை நோக்கிச் சென்றான் எனப் பதில் கூறினார். இதைக்கேட்ட அந்தக் கள்வர் திரும்பிச் சென்றனர். அவ் வர்த்தகனும் தான் போகவேண்டிய நாட்டிற் கேகினான். இதனால், நம்மில் அநேகர் அப் பெரியோர் சத்தியந் தவறினார் என் றெண்ணலாகும். அவர் சத்தியந் தவறினது உண்மையே! அசத்தியஞ் செய்வது பாபமெனத் தெரிந்த விஷயமே! எவரும் உண்மையையே பேசவேண்டுமென்பதும் பொய் பேசலாகாது என்பதும் சகலரும் அறிந்த விஷயம்.

“பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்.”

என்னும் ஆன்றோர் வாக்கை ஆதாரமாகக் கொண்டு, அந்த மனிதனுடைய உயிரை மீட்கும் பொருட்டே அவர் அப் பொய்யைச் சொல்லியருளினார். இப்படிச் சொல்லாது அவர் உண்மை உரைப்பாராகில் அவ் வர்த்தகன் உயிர் பிழைப்ப தரிதாகும். இதை நாம் சற்று சிந்திப்போமாகில் அவர் செய்த உபகாரம் எத்தனை நன்மையளித்ததென் றறிவோம். அசத்தியஞ் சொல்வது பாபம் என்று மேற்கூறி இருக்கிறது. கொலை புரிவதும் பாபம் எனத் தெரிகிறது. தான் கொலை புரியாவிடினும் தன்னால் கொலைபுரியப்படுவது பாபமே! இதை நோக்கியே ஒருவனுக்கு உபகாரஞ் செய்ய, அவன் உயிருக்குச் சேதம் வருமாயின், அவ்விடத்தில் சத்தியந்தவறி அவ்வுபகாரத்தை அவனுக்குச் செய்யலாம் என்று முன்னோர்கள் முறையிடுகிறார்கள். “பொய்யினும் பெரிது கொலை” இவ்வித சந்தர்ப்பங்களுக்குச் சொல்லும் பொய்யானது பாபமாகாது. நிற்க, வறுமையுற்ற காலத்தும் பெரியோர்கள் உபகாரஞ்செய்தலைக் கைவிடார்கள் என்னும்விஷயம் இவ்வுதாரணத்தால் விளங்குகிறது. ஆதலால் இவ்வித உபகார குணமுடையவர்களையே உலகோர் புகழ்ந்து பேசுகிறார்கள். இம்மையில் துன்பமடையும் இவர்களுக்கு மறுமையிலுந் துன்பமே.

ஆதலின் நாம் எவ்வித நிலைமை அடையினும் அபசாரமெனும் துர்க்கிருத்தியத்தை யொழித்து உபசாரமெனும் நற்கிருத்தியத்தை மறவாது, மனமொழி மெய்யெனும் திரிகரண சுத்தி யுடையவர்களாய், மானிட ஜென்மமெடுத்ததின் பலனை யடைவோமாக.

இரு சிலாஸாஸனக் குறிப்புகள்.

பின்வரும் இரு சிலாசாஸனக் குறிப்பின் நகல்கள் நமக்கு காயாமொழி ஸ்ரீமான் சு. பார்வதி ஆதித்த நாடார் அவர்களிடமிருந்து கிடைத்திருக்கின்றன.

760-ம் ஆண்டு தைமீ 14-ந்தேதி சுக்கிரவாரமும் அஸ்த நட்சத்திரமும் கூடின சுபயோக சுபதினத்தில் குடநாடு திருச்செந்தூர் சிரிபுவன மகாதேவி சதுர்வேத மங்கலத்தில் நாயநாரிணைய நயினர் கோயில் சொர்ண நிலயத்தில் திருச்செந்தூர் சுவாமி சிவக்கொழுந்தீஸ்வரர் கோயில் சிவக்கொழுந்து முதலியார் திரவியத்தினாலும் சாமிக்கொத்தனாலும் வேலாயுதச்சிவம் பண்டாரத்தாலும் கெட்டப்பட்ட பெரிய கொட்டாரவாசல் பெரிய கதவுக்கும் கிழக்கு. விஜையரங்க நாயக்கர் காசிபக்கொத்து நாயக்கர் இவர்கள் அதிகாரத்தில் அவர்கள் வகை நாகிங்கராயர் கிஸ்ட்ணராயர் அதிகாரத்தில் கட்டப்பட்ட மண்டபத்துக்கு எல்லையாவது; வடஎல்லை. திம்மிசெட்டி சுப்பராய செட்டி நந்தவனபூசை மடத்துக்கும் தெற்கு. கதவு இல்லாத பெரிய கொட்டாரவாசலுக்கும் கருப்பசாமி குத்துக்கல்லுக்கும் மேற்கு. சிவனணைஞ்சபெருமாள் பிள்ளை சத்திரத்திற்கும் பாசாம்பப்பன் முன்னோர்கள் காலிமனைக்கும் வடக்கு. இந்நான்கு எல்லைக்குட்பட்ட மண்டபம், காயாமொழியிலிருக்கும் சிவந்தி ஆதிச்ச நாடான், குமாரசாமி ஆதிச்சநாடான் உள்ளிட்டாரால் அப்போது வழங்கப்பட்ட நாணயம் தருக்காசு, நம்பிப் புலிராகன் ஏக்நாராணயம் ... ... இதனால் கட்டப்பட்ட மண்டபம். இதன் கணக்கு நாடாக்கள் வீட்டில் சோதனைசெய்து ஷை கணக்கில் அதிகாரஸ்தர்கள் கையெழுத்து சகிதமாய் பார்வையிடப்பட்டும் அவர்கள் கையெழுத்து வைக்கப்பட்டிருந்த கணக்கு சீரணப்பட்டும் அதற்கு பதில் நகல் எழுதப்பட்டு இருக்கிறது. நகல் எழுதினது நாடாக்கள் கணக்கு, வீரவாகு பிள்ளை.

முத்துகுமாரசாமிபா பிள்ளை, தாசில்.

850-ஆண்டு வைகாசிமீ 23உ ஆதித்தவாரமும் ரேபதி நட்சத்திரமும் கூடின சுபயோக சுபதினத்தில் குடநாடு திருச்செந்தூர் சிரிபுவன மகாதேவி சதுர்வேத மங்கலத்தில் நாயனாரிணைய நயினர் கோயில் சொர்ண நிலயத்தில் திருச்செந்தூர் சிவக்கொழுந்தீஸ்வரர் கோயில் கருப்பசாமி குத்துக்கல்லுக்கும் கதவில்லாத பெரிய கொட்டார வாயலுக்கும் கிழக்கு வடக்கு எல்லை. சிவழுப்பன் சவுக்கைக்கும் மேற்படி கிழமேல் ஓடிய பாதைக்கும் திருமலையப்ப பிள்ளை காலிமனைக்கும் தெற்கு. கிழ எல்லை. ஆதிச்ச நாடாக்களால் கட்டப்பட்ட கொட்டகைக்கும் மேற்கு. தென் எல்லை. பாஞ்சாலங்குரிச்சி குமாரப் பிள்ளை மண்டபத்துக்கும் கருப்பன் செட்டி மடத்துக்கும் கம்மாளர் காலிமனைக்கும் கிழமேல்ஓடிய இடுக்குக்கும் வடக்கு. இந்நான்கு எல்லைக்குட்பட்ட மண்டபம் காயாமொழியிலிருக்கும் ராமலிங்க ஆதிச்ச நாடானும், தீத்தாரப்ப ஆதிச்ச நாடானும் அயப்பத்துமுகர் ஆதிச்ச நாடானும் வகையருக்களாலும் கட்டப்பட்ட மண்டபம். இதன் வகை விபரக்கணக்கு தீர்த்தாரப்ப தளவாயனும் வடமலையப்ப பிள்ளையனும் தவாபுவகை செய்து முதுநவாலும் கையெழுத்து வைக்கப்பட்டும் கணக்குகள் சீரணப்பட்டும் கொண்டு அதற்கு நகல் இருளப்ப மாணிக்கவாசகம் பிள்ளையால் நகல் எழுதப்பட்டிருக்கிறது.

முத்துக் குமாரசாமி பிள்ளை
தாசில்

எமது குறிப்பு.

இதில் கூறப்படும் வருடம் கொல்லம் ஆண்டாகும். இப்பொழுது நடப்பது கொல்லம் 1100 ஆகும். நாடார்களுக்கு திருச்செந்தூர் முதலிய தேவஸ்தானங்களில் எல்லா உரிமைகளும் இருந்ததாக விச்சாசனத்தால் விளங்குகின்றது. இதற்குப்பிறகே வடிகாசரால் இழந்து விட்டதாக விளங்குகின்றது.

(பத்திராதிபர்.)

மாமிசபக்ஷணம்.

(S. A. பகவதி ஆதித்தன், காயாமொழி.)

பாரதபுத்திர புண்ணிய வுத்தம சீலர்களே!

மகாத்மா காந்தியடிகளின் குருவாகிய ருஷ்யஞானியாம் டால்ஸ்டாய் அவர்களும் மாமிசம் உண்பதும் மதுபானம் செய்வதும் மனிதருள் மிருகத்தன்மையைக் கொடுக்கிறதென்றும் அவ்விரு செயலை விலக்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறார். அமெரிக்கா தேசத்திலுங் கூட பிரக்யாதி பெற்ற மூன்று டாக்டர்கள் மாமிச பக்ஷணத்தை கண்டிக்கின்றனர். அவர்களில் ஒருவர் தன் அந்தியகாலத்தில் குடிகளுக்கு தெரிவித்த நிபந்தனைகளில் நீண்டநாள் உயிர் வாழ்கைக்குரிய விதிகளைக் கூறுமிடத்து முதலாவதாக எவ்விதமான இறைச்சியையும் கொள்ளக்கூடாது என்று குறிப்பிட்டிருக்கிறார். மாமிச போஜனம் நம் நாட்டுக்கு ஒத்துக் கொண்டதோர் பக்ஷணமுமல்ல. சதா மச்சமாமிசங்களை புசித்து வருபவர்களை விட மச்சமாமிசம் புசியாமல் சாகவர்க்கங்களை புசித்துக் கொண்டு வருபவர்கள் திடகாத்திர தேகசுக சௌகர்ய தேஜஸுடனேயே விளங்குகின்றனர். மச்சமாமிசம் புசிப்பவர்களின் தேகம் நல்ல நிலையில் இருப்பதாகச் சிலர் கூறுவது வீண் வாதமேயாகும். இருதிறத்தினருள் எப்பக்கம் ரோகங்கள் அதிகம் புலப்படுகின்றன என்று கவனிப்பின் உண்மை விளங்கும். நமது மூலவழி நூற்களும் கொலைசெய்வதும் புலாலுண்பதும் பெரும்பாவமெனப் பகர்கின்றன. நம்பிக்கையே நலந்தரும் மேனாட்டினர் வியாபார தந்திரிகள் தங்கச் சாஞ்சியம் என்று போற்றப்படும் நம் இந்தியத் தேசநாட்டைக் கவர்ந்து காட்லிவர் ஆயில் முதலிய மச்சமாமிச வகை ஔஷத நெய்களைப் பரப்பிப் பணங்களைக் கொண்டுபோகின்றனர். பாவம் பாமர இந்தியர்களாகிய நாம் சைத்ரியை மறந்து சொந்தத் துணியைக் கைவிட்டு மேனாட்டுத் துணியைக் கட்ட ஆரம்பித்ததுபோல் ஆயுர்வேதபாகத்தைக் கைப்பக்குவமாய்ச் செய்து புசித்து மகிழாமல் மேனாட்டாரின் ஔஷதங்களைப் புசிக்கலானோம்.

இனி நாம் நம்மின் பூர்வ ஸ்திதியை நினைத்து நமது வைத்திய முறைகளைக் கையாட வேண்டுமேயொழிய மேனாட்டாரின் ஆயில்களை வாங்கிப் புகழ்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை. நம் நாட்டு மருந்துகளை விட அவைகள் மேலானவைகளுமல்ல, அன்பர்கள் வீண் பகட்டில் வெளியாடம்பரங்களில் மயங்கிவிட வேண்டாம். இல்லறத்தார்கள் மாமிசம் புசிக்கலாம் எனக் கூறும் ஸ்டைபன் அவர்களும் கூட அவ்விடத்திற்றானே சாகபக்ஷணம் சுத்தமான ஆகாரம் என்பதில் தடையில்லை எனக் கூறியிருக்கின்றார். சுத்தமான ஆகாரமிருக்கையில் அசுத்தமான ஆகாரத்தை நாம் ஏன் கைக்கொள்ளல் வேண்டும். மச்சமாமிசம் துர்நாற்றமும் அசுத்தமும் கேவலமுமான பொருள் என்று நம் கண்ணினாலேயே பார்க்கலாம். கண்ணாடியோ வேறோர் கருவியோ தேவையில்லை. உண்டுமுடித்து இளைப்பாறிய பின்னரும் கூட வாய்நாற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கும் மச்சமாமிச போஜனம் சிலருக்கு பரம ஔஷதமாகக் காணப்படுவது பெரியதோர் வியப்பே. எவ்வாற்றானும் நமக்குரியதல்லாத அந்த வுணவை விலக்கி நல்ல வுணவாகிய சைவ போஜனத்தை புசித்து வாழ்ந்து வருவதே நம் கடமையாகும். சுபம்!

மதிப்புரை.

திருவனந்தபுரம் புத்தன்சந்தை எளியோர் ஆங்கில பாடசாலை ஆசிரியர் சதாசிவம் பிள்ளை B. A.; அனுப்பிய முதல்மாதப் பாடப்புத்தகம் பார்வையிட்டோம். பிரதியக்ஷரத்தையும் எழுதவேண்டிய, உச்சாரணஞ் செய்யவேண்டிய விதங்களைத் தகுந்த உதாரணங்களுடன் மாணவர்களுக்கு எளிதில் மனதிற் பதியுமாறு விளக்கியுள்ளார். ஆங்கிலமும், அதன் உச்சாரணமும், தமிழ்ப்பொருளும் முறையே கூறியிருப்பதாலும் நாடோடிய பழக்க வார்த்தைகளை முதலிற் கற்பிக்கச் செய்வதாலும், இதை வாங்கி வாசிக்கும் சேயர்கள் சுலபத்தில் ஆங்கிலம் பேசக் கற்றுக்கொள்வர் என்பதிற் சந்தேகமில்லை.

க்ஷத்திரிய மித்திரன்.